



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கருத்து

பாலஸ்தீன விடுதலை இயக்கமானது முதலாளித்துவத்தின் பொய்ப் பிரசாரங்களை முறியடிக்க தமக்கென ஒரு சொந்தப் பிரச்சார இய-ந்திரத்தை படைத்ததன் மூலமே சர்வதேச மக்களின் இதயங்களைக் கவ்விப்பிடித்தனர். இன்று லெபனானிய முற்போக்கு சோஷலிசக்கட்சி முதற்கொண்டு பாக்கிஸ்தான் மக்கள் கட்சியீறாக ஏகாதிபத்தியத்தின் பிரச்சாரத்தை முறியடிப்பதன் மூலமே மக்களை உளைசலாட்டமில்லாத-தோர் நிலைக்குக்கொண்டு வந்து அவர்களின் சிந்தனையை அணை போட்டு விடுதலைக்குப் பாவிக்கலாம் என்பதை உணர்ந்துகொண்-டனர். காலாகாலமாக நாங்கள்தான் தமிழீழ விடுதலைக்குத் தயாரி-த்தோம் - எனக் கூறுகின்ற விடுதலை இயக்கங்களில் எத்தனை தமது சொந்தப் பிரச்சார இயந்திரத்தை ஸ்தாபித்தது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) மறைமலையானின் "மக்கள் பாதை மலர்கிறது" இடம் தமிழ் ஈழப் போராட்டத்திற்கு கொ-ந்தராத்து பேசி முடிந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரச்சார இய-ந்திர வழியில்லாத தன்மையால் அது "விடுதலை" பத்திரிகையிடம் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. நாளாந்தம் ஜயவர்த்தன, அமிர்தலிங்கம், IMF, CIA செய்கின்ற ஒவ்வொ-ரு செயலையும் நிலைப்பாடெடுப்பதற்கு PLOT இடமோ, TELO இடமோ, TELA இடமோ, புலிகளிடமோ நாளாந்தப் பத்திரிகையையோ, கிழமை அல்லது மாதப் பத்திரிகையோ கூடக் கிடையாது.

தோழர் தேவசேகரம் குலசேகரம் சுட்டுக்கொல்லப்பட்ட போது அவர் எதற்காக கொலை செய்யப்பட்டார் என்பதை மக்களி-டம் விபரிக்க ஒரு பத்திரிகை விடுதலைப் புலிகளிடத்தில் இல்லாமல் போனதன் காரணமாக மக்கள் வியாகூலம் அடைந்தார்கள். அவர் கொல்லப்பட்டதும் அதுபற்றிய நிலைப்பாட்டை எடுப்பதற்கு விடுதலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்திடமோ, PLOT இடமோ, TELO விடமோ பத்திரிகை இல்லாது போனது மக்களை இன்னும் வியாகூலத்திற்குக் கொணர்ந்தது.

குட்டிமணியைக் கள்வன் என்றும், கொள்ளைக்காரனென்றும் வீரகேசரியும், தினகரனும், Daily News உம், Sun உம், ரேடியோவும், ரெலிவிசனும் 24 மணித்தியாலமும் ஒலிச்சலித்திக் கத்தியபோது அப்பிரச்சாரத்தை முறியடிக்க. TELO விடம் சொந்த பிரச்சார இயந்திரம் இருக்கவில்லை.

தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதென்பது நாளாந்த சமூகச் சிக்கலினுள் எழும் நெருக்கடியினுள் சரியான நிலைப்பாட்டை எடுப்பதன் மூலமும், முதலாளித்துவப் பிரச்சாரத்தை முறியடிக்கவல்ல சொந்தப் பிரச்சார இயந்திரங்களை படைப்பதன் மூலமுமே சாத்தியமாகும். இதை விடுதலை இயக்கங்கள் உணருமா?

# EDITORIAL

## Lebanon

The object of the imperialist forces is to prevent the fall of the Gemayel regime and to impose the Reagan-Shultz plan against the opposition of the majority of the Lebanese people.

In the past month US batteries have shelled the Druze-held Chouf mountains, French Super Etendards have flown spy flights over the area and on Saturday two British Buccaneer strike aircraft buzzed Beirut in an act of imperialist provocation

We the Tamil Eelam International Liaison Committee extend our revolutionary support to Walid Jumblatt, his comrades and the oppressed Lebanese masses.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் தங்கத்துரை

இரண்டு இனங்களுக்கிடையேயான வேற்றுமை சூழ்ந்த தசாப்தங்களை முடிவுக்குக் கொண்டுவந்து அதைச் சுதந்திர சோஷலிச தமிழீழத்தால் இடம்பெயர்க்க அத்திவாரம் இட்டவர்தான் தோழர் தங்கத்துரையாகும். தங்கத்துரையினது வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுவதென்றால் சுதந்திர சோஷலிச தமிழீழத்தை அமைப்பதற்கு முன்னின்றுழைத்த காரணியான ஓர் புரட்சிகர இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதில் பிரயாசைப்பட்டுக் கொண்டிருந்த ஒரு போராளியும், அதிகாரியும் என்றே காட்டலாம். தமிழ் மக்களது மூன்று பெரிய கட்சிகள், காலங்காலமாகத் திரண்டு விசுவரூபமெடுத்த தமிழ் மக்களது பிரச்சினைக்கு முன்னால் பேடியாகிப் பொறிந்து கொட்டப்பட்டபோது, தமிழ் மக்களின் எந்தத் தலைவர்களாவது ஓர் தீர்வைக் கண்டுபிடிக்கத் திராணியில்லாதபோது ஒரு புதிய தீர்வைப் பிரேரித்தவன்தான் தங்கத்துரை. அவன் தனது பிரேரணையை வெறும் பிரேரணையாக மட்டும் நிறுத்தாது அதற்குச் செயல்வடிவம் கொடுக்க முற்பட்டபொழுது TELO பரிணமித்தது. நாற்பதில் உருவாகிய தமிழ் காங்கிரஸ் தலைமையும், ஐம்பதில் உண்டாகிய தமிழரசுக் கட்சித் தலைமையும், எழுபதில் உண்டாகிய தமிழர் விடுதலைக் கூட்டணியும் திரட்டித்திரட்டி ஒன்று சேர்த்து வைத்திருந்த இராட்சதப் பிரச்சினைகளுக்கெல்லாம் முகங்கொடுத்தே TELOவைக் கட்டியெழுப்ப வேண்டிய தலைவிதி தங்கத்துரைக்கு இருந்தது. சம்பிரதாயம் பாராளுமன்ற வாதிகளதும், பழமை விரும்பிகளதும் பிழைப்புவாத இரும்புத்திரைகளை உடைத்துப் புதிய பரம்பரையினரை புரட்சிகர விடுதலைக்காக ஆயுதபாணியாக்க வேண்டிய பெரும் பொறுப்பும் தங்கத்துரையின் தலையில் விழுந்தது. சரித்திரம் தமிழ் மக்களுக்குப் பரிசளிக்கக் காத்திருக்கும் புதிய புரட்சிகர நிலைமைகளை எவ்வாறு சரிவரப் பயன்படுத்துவது என்பதே தங்கத்துரையின் முன்னிருந்த பிரச்சினையாகும். அவன் விடுதலைக்காக நடைமுறையில் கடுமையாக உழைப்பதும், ஓர் இயக்கத்தை கட்டி வளர்ப்பதும், அப்படி கட்டி வளர்க்கும்போது எழும் பிரச்சினைகளை எவ்வாறு சமாளிப்பது என்பதைக் கற்றுக்கொள்வதும், தீர்க்கமான புறநிலைக் காரணிகளை தூரதிருஷ்டியுடன் முன்னோக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்குப் பகீரதப் பிரயத்தனம் எடுப்பதும் விடுதலைக்கு இன்றியமையாதது என்பதை செயலில் காட்டியவருமாகும்.

சூக்குமப்படுத்திய புரட்சிகர சூத்திரங்களை உச்சாடனம் செய்வதால் மாத்திரம் தமிழினம் பூண்டோடழிவிலிருந்து தப்பிவிடப் போவதில்லை. யதார்த்த சூழலில் உணர்மை பூர்வமான செயற்பாடுகளாலும், காலங்காலமாகத் தமிழ்மண்ணில் வளர்ந்து வந்த தத்துவார்த்த சங்கிலிக் கோவையின் துணையாலும், அரசியல் மற்றும் இயக்க நடைமுறைகளால் தமிழ் மக்களின் உணர்மைபூர்வமான பகுதியினரை ஒன்றாகத் திரட்டி, உருக்கி, ஒட்டி டெலோவின் களங்கமற்ற பதாகையின் கீழ் அணிதிரட்டி, எண்ணிக்கையாலும், தன்னம்பிக்கையாலும் வலிமைடி பாய்ச்சி பரந்துபட்ட தமிழ்மக்களோடு சங்கமமாகச் செய்யவல்ல தலைமையைக் கட்டி வளர்த்து தமிழினத்தின் வரலாற்றுத் தேவை நெருக்கடிக்கு தீர்வு வைக்கப் புறப்பட்டவன் தான் தங்கத்துரை.

தங்கத்துரைக்கு அரசியல் யதார்த்தமாகவேண்டும். வெறுமையான பேச்சுக்களும், வெற்றுவார்த்தை வெருட்டல்களும் எமக்கே ஆபத்தானதென்ற கொள்கையுடையவன். எதையாவது செயலிற் செய்யாதவரை எதையும் விளங்கமுடியாதென்ற கொள்கையுடையவன். விடுதலையென்பது இன்றோ, நாளையோ ஆயுதக்கிளர்ச்சியாகப் பரிணாமம் அடையுமென்பதைச் செவ்வனே விளங்கியவன். அதனால் தமிழ்மக்களுக்கான இராணுவத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியை இன்றே தொடங்கவேண்டும் என்ற நிர்ணயம் உடையவன். முன் ஒருபோதும் இராணுவ அனுபவமோ, அரசியல் அனுபவமோ இல்லை என்பதற்காக அத்தியாவசியமாகச் செய்யவேண்டிய அவ்வேலையைத் தோல்வி மனப்பான்மையால் தட்டிக்கழித்தவன் அல்லன். தமிழ் மக்கள் சமாதானத்தை நோக்கி முன்னேற வேண்டுமானால் ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிரான ஆயுதக்கிளர்ச்சிவரை போராட வேண்டும் என்பதைக் கண்டுகொண்டவன்.

ஒடுக்கப்பட்ட தமிழ்மக்கள், ஒடுக்குமுறையால் மரியாதை கெடுத்தலால் ஒருநாள் மாறி மறுநாள் என்ற விதத்தில் வேதனைப் படுவதால் களைத்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். அவர்களுக்கு கௌரவமான வாழ்வு மீண்டும் வருமென்ற நம்பிக்கையோ, எண்ணமோ கிடையாது. அரசின் ஒடுக்குமுறைக்கு முன்னால் தமிழ் மக்கள் அடிமாடுகளாகவோ, மந்தைகளாகவோ ஆக்கப்பட்டு விட்டார்கள். இதற்குரிய பரிகாரம் பிரதம மந்திரியையும், வேறு மந்திரிகளையும் மாற்றுவதால் ஏற்படப் போவதில்லை. தமிழ்மக்கள் முழங்காலில் நிற்பதால்; பலமுள்ளவர்கள் மேலும் பலமுள்ளவர்களாகத் தெரிகிறார்கள். தமிழ் மக்கள் எழுந்து நிமிர்ந்திட வேண்டும். சரித்திரத்திலே கருச்சிதைவுகளும் சுகப்பிரசவங்களும் உண்டு. சரித்திரத்திலே சுகமானதொரு புரட்சி பிரசவிக்க வேண்டுமானால் வெகுஜனங்கள் கிளர்ந்தெழுந்து, நாடுதழுவக் கிளர்ந்தெழுந்து ஆட்சியைக் கைப்பற்றி ஒரு புதிய நிர்வாகத்தை ஏற்படுத்தி சுரண்டலையும் வர்க்க பேதங்களையும் இல்லாமற் செய்ய வேண்டும். மக்கள் நாட்டின் வளங்களின் எஜமானர்களாக வேண்டும். இன்றைய அரசியல்வாதிகள் சமூகத்தின் இந்தப் புனிதமான வேலையைச் செய்வதற்குத் தகுதியற்றவர்களாகி விட்டார்கள். சுதந்திரமும், சமாதானமும், சமத்துவமும் இன்று அடையமுடியாத ஒன்றாகிவிட்டது. அப்படியெனில் சமுதாயமே ஓர் அழுகிய சமுதாயமாகிவிட்டது. பந்தம் பிடிப்பதும், லஞ்சங் கொடுப்பதும் சமுதாய மரபாகிவிட்டது. இதை நிறுத்த முற்பட்ட ஒரு சிலரையும், அரசு தொடர்ச்சியாகவும், விட்டுக்கொடாமலும் ஒடுக்குகின்றது. நேர்மைக்கும், மனித நேயத்திற்கும் எதிரான போராட்டத்தை அரசு எப்பவாகிலும் விட்டதாகத் தெரியவில்லை. மக்கள் மடையர்களாகவும், கோழைகளாகவும் மாறிவிட்டால் அவர்களுக்கு வாழும் உரிமை மறுக்கப்படுகின்றது. மனித இனத்திற்குச் சர்வ வியாபகமாக ஒடுக்குமுறையை மன்னித்து மறக்கும் மனோபாவம் வேண்டுமாம். இதை அனுமதித்தால் மனித சமுதாயமே காட்டுமிராண்டித்தனமாகப் போய்விடும் என்பதைக் கண்டுகொண்டவன் தான் தங்கத்துரை. இதை நிறுத்த வேண்டுமானால் அன்றேல் வாழ்க்கையில் ஏதாவது சிறிது மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால் விட்டுக்கொடாத தொடர்ந்த பிடிவாதமான போராட்டமில்லையெனில் அது இம்மியாவும் நடக்கப் போவ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை. அதற்காக ஒரு போராட்ட அமைப்பு இல்லையெனில் விமோசனமோ, விடுதலையோ வந்துவிடப் போவதில்லை. இதை நம்பியதன் பிரதிபலிப்பே TELOவின் படைப்பாகும்.

திரையப்பாவைக் கொன்று புலியியக்கம் அரசியல் மேற்பரப்பில் மருவியபொழுது அதில் அங்கம் வகித்த இளைஞர்களை புகழுரைப் புழுகுரைக் கீதங்களால் தன்வசமாக்கிய அமிர்தலிங்கமும் கூட்டணியும் புலி இயக்கத்தைக் கூட்டணியின் பாதுகாப்புக் குழுவாகப் பாவித்தது. எண்பத்தொன்றில் புலியியக்கம் கூட்டணிக் கொச்சைப்பிடித்தமையால் ஏற்பட்ட உள்முரண்பாட்டால் திவலைகள், திவலைகளாகச் சிதறிப் பலம் குன்றவே ஐயா அமிர்தலிங்கம் TELOவைத் தனது பாதுகாப்புக் குழுவாக மாற்றுவதற்காக தங்கத்துரையை அணுகினார். இது காலம் வரை தமது அரசியலைத் தங்கத்துரையிடமோ, ரெலோவிடமோ கேளாத அமிர்தலிங்கம் மாவட்டஅபிவிருத்தி சபையை ஏற்பதற்கான நியாயத்தை தங்கத்துரையிடம் கேட்க தமிழ்நாட்டுக்கு வந்தார். தங்கத்துரையின் இறுதியானதும், உறுதியானதுமான முடிவு வெட்டொன்று துண்டு இரண்டு போன்றது. மாவட்ட அபிவிருத்தி சபை என்பது செப்படிவித்தை அதை ஏற்கக்கூடாது என்றார் தங்கத்துரை. ஐயா அமிர் அதைப் பொருட்படுத்தாமல் தன்னிஷ்டப்படி மாவட்ட அபிவிருத்திசபையை ஏற்றார்.

அதற்கு பிராயச்சித்தமாக உடுவில் எம்.பி தர்மலிங்கத்தின் அரச சலுகையான ஜீப்வண்டியை எரித்து தனது நிலைப்பாட்டை விளங்கப்படுத்தினார். கூட்டணியிடமிருந்து எவ்வித நெருக்குவாரம் TELOவுக்கு வரும் என்று தங்கத்துரைக்குத் தெரியும். காலங்காலமாக தங்கத்துரை, குட்டிமணி குழுவினரையும், TELOவையும் தமிழ் மக்கள் அங்கீகரியாமை கூட்டணியின் இயுக்தியால் என்பதைத் தங்கத்துரை அறியாதவரல்லர். தங்கத்துரை முகமனுக்கு மயங்கும் மூடபுத்தி படைத்தவரல்லர். தங்கத்துரையின் இந்த நிலைப்பாடுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத்துரை, குட்டிமணி பிடிபடுவதற்கும், TELO உடைவதற்கும் அத்திவாரமாக அமைந்தது.

தங்கத்துரையின் அரசியல் நிலைப்பாடு வழுவழுப்பானதல்ல. சளாப்பலோ, சமாளித்தலோ இல்லாத மிக நேரானது. எழுபத்தேழு தேர்தற் காலத்தில் (GENERAL ELECTION) உடுப்பிட்டித் தொகுதியில் சிறுபான்மைத் தமிழரான இராசலிங்கம் கூட்டணி சார்பாக போட்டியிட்டார். வல்வெட்டித்துறையிலே கனகராசா இதர்னையார் எனப் பெயர்கொண்ட யூ-என்-பி ஏஜன்ட் ஒருவர் யூ-என்-பி சார்பாகத் தேர்தலில் கேட்கவிருந்தார். தங்கத்துரை, கனகராசா வீட்டுக்கு தானே நேரில் போய் யூ-என்-பி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகளைத் தவிர வேறு எந்தக் கட்சியும் தேர்தலிற் போட்டியிடலாம். ஆனால் யூ-என்-பி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிகள் சார்பில் போட்டியிடுபவர்கள் போட்டியிலிருந்து வாபஸ் வாங்காதுபோனால் ஈ.ன, இரக்கமில்லாமல் சுட்டுத்தள்ளுவோம். வருவது வரட்டும் என்றார். இந்தச் சம்பவமும், இராசலிங்கத்தின் பிரச்சாரக்குழுவை எப்படியும் பாதுகாப்போம் என்று பிரகடனப்படுத்தியதுமே மிகுந்த சாதிவெறியர்களின் பகுதிகளிலும் போய் கூட்டணியினர் பிரச்சாரம் செய்யக்கூடியதாக இருந்தது. இராசலிங்கத்தின் வெற்றிக்கு இதுவுமோர் காரணியாகும்.

தங்கத்துரை தனக்குத் தெரியாததைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்பவரல்லர். இன்றுள்ள மற்றைய விடுதலை இயக்கங்களின் தலைவர்களைப்போல தங்கள் இதயத்துள் ஜீரணிக்கமுடியாத சோஷலிச வேலைத்திட்டங்களையும், விதிமுறைகளையும் தெரிந்ததாகக் கூறித் தமிழ்மக்களை ஏமாற்றியவரல்லர். மாக்சியத்தையும், மற்றைய தத்துவங்களையும் தன்னால் முடிந்தவரை கற்றுக்கொள்ள பிரயத்தனப்பட்டவராகும். வித்தியாசமானவர்களைக் கூட்டிக்கொண்டுவந்து கொள்கை வெளியீட்டுப் புத்தகங்களை எழுதிவிட்டு, அதை தாமே விளங்கத் தகமை இல்லாதபோதும் தமது கொள்கையாகப் பிரகடனப்படுத்தியவரல்லர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை உண்டாக்குவதற்கு ஒருவர், தலைமைக்கு ஒருவர் என்ற செப்படி வித்தையைக் காட்டவில்லை. சரியான தத்துவத்தைப் படைக்கவல்லவரால் ஓர் இயக்கத்தை முன்முயற்சி எடுத்துப் படைக்கவும் முடியும் என்ற அசையாத நம்பிக்கை உடையவர். இதற்கு உதாரணமாக லெனினை இயக்கத்தைப் படைத்தவர். அவரே அதன் தத்துவாசிரியருங்கூட. ரொக்ஸியே நான்காம் அகிலத்தைப் படைத்தவர். அவரே அதன் தத்துவாசிரியருங்கூட. தங்கத்துரையே TELO வைப் படைத்தார். அவர் ரெலோவைப் பற்றிக் கூறியதெல்லாம் அவரது அறிகைப் புலத்துள் உட்பட்டதை மாத்திரம் தான். அதற்கோர் எல்லை இருந்தது உண்மைதான். அது யதார்த்தமானதலால் காலத்தால் அழியாததாகும்.

# Reagan to visit China

PEKING — The Chinese Stalinist bureaucracy is to welcome US President Reagan to Peking next year to extend arms negotiations begun this week.

He will visit China in April, and Premier Zhao Ziyang will travel to Washington next January, US Defence Secretary Caspar Weinberger said yesterday.

After meeting Chinese leader Deng Xiaoping, Weinberger said that talks in Peking this week had been 'very useful and positive' and that he envisaged increased military cooperation between China and the US government.

He said that there had been general agreement on US sales of weapons to China, adding: 'and these will mature, I think very quickly, into actual transfers of weapons systems if that is what the Chinese want.

'We expect to have continuing military-to-military and technical discussions and I don't see personally at this time any kind of insurmountable or even major problems.'

He said that the talks had touched on the subject of US arms sales to Taiwan and that he had stressed that the US government was committed to the 1972 Shanghai Communique which acknowledged the Peoples' Republic as the only legitimate government of China.

Weinberger said that he had also discussed the 'very rapid build-up' of Soviet forces in the Pacific.

The New China News Agency quoted Deng as saying there was 'common ground between China and the US. But there do exist divergences which need to be cleared up'.

● Leaders of China and the Soviet Union will resume talks in Peking on October 6 in a bid to improve relations after more than 20 years of hostility, a Chinese government spokesman said yesterday.

THE News Line



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எண்ணம்" ஓராண்டு ஆய்வு

"துடிப்புள்ள அரசியல் வேலையை" துவக்கிவிடுவதற்கு உயிர்ப்புள்ள அரசியல் கிளர்ச்சி ஒன்றே வழியாகும். அடிக்கடி வெளியிடப்படும் ஒழுங்காக விநியோகிக்கப்படும் ஓர் தரமான பத்திரிகை நம்மிடம் இல்லையாயின் இது அறவே சாத்தியமின்று.

லெனின்.

காலத்தின் கோலத்தால் துர் அதிர்ஷ்டவசமாக தமிழ் சிறார்களாக பிறந்த நாம் எம்மினத்தின் சாபக்கேட்டைப் போக்க சரியானதோர் அரசியல் தெளிவு இல்லாமையினாலும், சரியான அரசியல் முன்னோக்கும், துலாம்பர சிந்தனையும் திட்டங்களும் இல்லாமையினாலும் தமிழ் மக்களுக்கு ஏற்படும் இழப்புகளை எண்ணி, இதனை போக்குவதற்கு துணிவு கொண்ட சிலரின் முன் முயற்சியினால் துடிப்புள்ள அரசியல் வேலைகளை செய்வதற்கு அடிக்கடி வெளியிடப்படவும், ஒழுங்காக விநியோகிப்படவும் சிந்தனைகொண்டு "எண்ணம்" தோற்றுவிக்கப் பட்டது.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் உள்முரண்பாடுகளையும், ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்புரட்சிச் சதிகளையும் தமிழ் மக்களுக்கு விளங்கப்படுத்தி "ஜெயவர்த்தன அமிர்தலிங்கத்தின்" கூட்டரசாங்கத்தை தோற்கடிக்கவென்றே புரட்சிக் கரு உண்டாகி 29.10.82. அன்று "எண்ணம்" பிறந்தது. தனது ஓராண்டு காலத்தில் மற்றைய விடுதலை இயக்கங்களை நெறிப்படுத்த முயன்ற "எண்ணம்" மற்றைய இயக்கங்களின் எழுத்து மூலமல்லாத பதில் விமர்சனங்களையும் தோழமையோடு ஏற்று தனது பணியில் தொடர்ந்து சென்றது.

"புரட்சிகர கலாச்சாரம்" என்ற உயர்ந்த பக்குவத்தன்மையை எல்லோர் மனதிலும் எழச் செய்ய வேண்டுமென்ற நிலைமை உருவாக "எண்ணம்" ஈண்டுக்குறிப்பிடக்கூடிய அளவு மாற்றத்தை உண்டு பண்ணக்கூடிய வகையில் பிரதிபலிக்கிறது. "எண்ணம்" வெளியாகி இத்துடன் ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது. கடந்த இதழ்களின் நிலைப்பாடுகள் பற்றி தமிழ் மக்களுக்காக இங்கு ஆராய்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்பிதழ்

1982 ஜனாதிபதி தேர்தலில் எமது நிலைப்பாட்டை சரியாகவும், தந்திரமாகவும் பாவிக்கும்படி தமிழ்மக்களிடம் கேட்டிருந்தோம். கொப்பேகடுவா, ஜெயவர்த்தன பதவிக்குவருவார்களாயின் இவர்கள் ஏகாதிபத்திய உதவியோடு எம்மை மேலும் ஒடுக்குவார்கள். இவர்கள் பதவியில் இருக்கும்போது எமது விடுதலைத் தயாரிப்பை செய்வது கடினம் ஆகையால் இவர்களைவிடக் குறைந்த பட்ச ஒடுக்குமுறையாளர்கள் ரோகண விஜேவீரா அல்லது கொல்வின் ஆர் டி சில்வா அல்லது வாசுதேவநாணயக்காரவை தேர்ந்தெடுத்தால் அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளின் உதவி இவர்களுக்கு இலேசில் கிட்டாது. அதோடு நாமும் இவர்களின் ஆட்சிக்கால இடைவெளியில் எமது போராட்டத்திற்கு தயாரித்துவிடலாம். தற்போதய காலகட்டத்தில் போராட்டத்திற்க்கு தயாரற்ற நிலையில் நிற்க்கும் நாம் இத்தந்திரத்தை பாவிக்க வேண்டியுள்ளதாகையால் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டாம். இம் மூன்று இடதுசாரிகளுள் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்படி கோரினோம்.

இதில் நாம் விட்ட தவறு இவ் இடதுசாரிகளில் ஒருவரின் பெயரை இறுதியாகக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இதை பிரான்சு **"தமிழ் முரசு"** ஆசிரியரும் சுட்டிக்காட்டினார். இது அன்றைய அரசியல் முதிர்ச்சியின்மைதான். அன்று நாம் கொல்வினார் டி சில்வாவையே குறிப்பிடவேண்டியிருந்தது. இருந்தும் அவருக்கு வாக்களிக்குமாறு நேராக குறிக்கப்படவில்லை. இது தமிழ் மக்களுக்கு குழப்ப நிலையை ஏற்படுத்தியிருக்கும்.

## எண்ணம் இல 1

உலகவிடுதலை இயக்கங்களுக்கு உந்துசக்தி கொடுக்கும் ஒப்பற்ற புரட்சியாளன் யசீர் அரபாத்தை முன் அட்டையில் இட்டதன் மூலம் **"எண்ணம்"** தனது புரட்சிகர அந்தஸ்தை மேலும் உயர்த்திக்கொண்டது. அதோடு பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப்பற்றிய விபரத்தையும் போராளிகளுக்கு எடுத்தியம்பியதன் மூலமும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைப்பற்றிய மேலெழுந்தமான ஓர் உணர்வை தமிழ்மக்களிடையே* விட்டுச்சென்றது. அத்துடன் தொடர்ந்து நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும், பத்திரிகைகளிலும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப்பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1




2




3




7




8





9




“பத்திரிகை என்பது ஒரு கூட்டுப் பிரச்சாரகனும்,
கூட்டான அமைப்பாளனுமாகும்.” - லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4




5




6




10




11




12




ட்டுக் கிளர்ச்சியாளனும் மட்டுமல்ல, அவ ஒரு
ன்ன செய்ய வேண்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிலைப்பாட்டை தமிழீழ விடுதலை இயக்கங்களின் பத்திரிகைகளில் முதலாவதாக எடுத்தியம்பியதோடு மற்றைய இயக்கங்களும் அந்நிலைப்பாட்டை எடுக்கப் போராடியது/போராடுகிறது.

உலகப்பிரச்சனைகள்; பொருளாதார நெருக்கடியின் குழந்தைகளே என "எண்ணம்" அழுத்தம், திருத்தமாக அறிந்து கொண்டதால், தொடர்ச்சியான பொருளாதார சிக்கல்களையும்; அது எப்படி தோன்றியது என்றும், அது எப்படி முடிவாகும் என்பதையும் எடுத்துக்கூறியதுடன் அந் நெருக்கடிக்கான தீர்வையும் திரும்ப, திரும்ப குறிப்பிட்டது. S.P.D.யும், பொருளாதாரப்பொறிவும் என்ற கட்டுரை கூடுதலாக எடுத்துவியம்புகின்றது—

தொழிலாள வர்க்கம் கற்றுக்கொள்ளவேண்டிய முக்கிய வரலாற்றுக் கட்டங்களையும்; 2ம் அகிலம் தொடக்கம் நடந்துவந்த வரலாற்றுத் துரோகங்களை மார்க்சியவாதிகளாகக் கூறிக்கொள்ளும் சந்தர்ப்பவாதிகளின் தில்லுமுல்லுகளால் இவ்வுலகிற்க்கு ஏற்பட்ட நெருக்கடிகளின் படிப்பனைகளிலிருந்து எடுத்துப்போகவேண்டிய உலகப்புரட்சியின் கட்டத்திற்கு அடிக்கல்லு நாட்டுபவனாக, தமிழ் மக்களுக்கு ஸ்தூணமாக விழங்கக்கூடிய வகையில் இவ்விதழ் அமைந்துள்ளது.

## எண்ணம் இல 2

“அமிர்தலிங்கத்தின் எவ்விதமான துரோகத்தையும் சட்டை செய்யாத “பக்தர் கூட்டம்” தேர்தலை பகிஸ்கரித்ததுடன் அவரின் அடி நெஞ்சையும் அறிந்து பழக்கப்பட்டவர்கள் U.N.P. க்கு புள்ளடி போட்டார்கள்.”

“அடிநெஞ்சிலேயே U.N.P. வெற்றி பெறவேண்டுமென்ற விருப்பம் இருந்ததாலேயே அமிர் வெளியூர் விஜயம் செய்தார், என்று அறிந்த தம்பிமார்கள் U.N.P.க்கு வாக்கு அளித்தார்கள். தேர்தல் பகிஸ்கரிப்பு வேலைகளை நின்று கவனியாமல்; ஜெயவர்த்தனாவின் துரோகங்களை அம்பலப்படுத்தாமல்; பத்திரிகை தணிக்கைக்கு எதிராக குரல் எழுப்பாமல் வெளிநாட்டுக்குச் சவாரி செய்தத சந்தர்ப்பவாதமெனக் கூறிவைக்கவிரும்புகின்றோம்.”

“மேற்கொண்டு தமிழ் மக்களை ஓரணியில் திரட்டி, அவர்களின் சக்தியைக் கூட்டி, மக்களை ஆயுத பாணியாக்கி சர்வதேச பின்னணியுடன் கூடிய ஒரு போராட்டத்தை தயாரிக்க வேண்டுமென்றல் அமிர்தலிங்கமும், த.வி. கூட்டணியும் செய்த துரோகத்திற்கெல்லாம் வட்டி செலுத்தியே தயாரிக்க வேண்டும்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் இன்று அவ்வளவு துரோகத்திற்குமாக வட்டி செலுத்துகிறோம் என்பதை தமிழ் மக்கள் மறந்து விடக்கூடாது. ஆசிரியர் கருத்தில் "இந்த இக்கட்டான கால கட்டத்தில் U.N.P. க்கு வாக்களித்த மக்களும், மவுனம் சாதித்து U.N.P. யை வரவிட்டவர்களும் தங்கள் எதிர்காலச் சந்ததியின் சிவக்குழியை கிண்டிவிட்டனர்." "மேலும் மேலும் இத்தலைமுறையினருக்கு விலங்கிட்டுவிட்டு தாம் தப்பிப் போனதிற்கு பிராயச்சித்தமாக தங்களது உயிரையும், இன்பத்தையும், இல்வாழ்வையும் அர்ப்பணம் செய்துதான் தீரவேண்டும்." இதை இன்று ஒப்புநோக்கும்போது எந்த அளவிற்கு உண்மை என்பதை நாம் நேரடியாக் காண்கிறோம்.

தற்போதய தசாப்தத்தில் நடக்கும் ஆளுவோருக்கும், ஆளப்படுவோருக்கும் உள்ள நெருக்கடி நிலைமைகளை, ஒடுக்குமுறைகளை சித்தரிப்பதாக முன் அட்டைப் படம் விளங்குகிறது.

உலகப்பொருளாதாரப் பொறிவும், பொருளாதார நெருக்கடியின் அம்சமாகவும் எழும் பிரச்சனைகள் பல்வேறு ரூபங்களை எடுக்கும். இருந்தபோதும் அதன் ஆணிவேர் என்னவென்பதை தமிழ் மக்கள் அறியும்படியாக "$ நெருக்கடி" என்ற கட்டுரையில் வெளியிட்டுள்ளோம். கட்டுக்கடங்காத பொருளாதார நெருக்கடியினால் இரண்டு உலகமகா யுத்தம் தோற்றுவிக்கப்பட்டன என்பதை துலாம்பரமாக எடுத்துக்காட்டியது.

"2வது உலகமகா யுத்தம் முடிந்து முதலாளித்தத்துவதிற்கு சாகா மருந்து தருகிறேன் என்று முளைத்த பொருளியல் தத்துவப் பேரறிஞன் J.M. KEYNES (கெயின்) தங்கத்திற்குச் சமமான டொலரை அச்சடித்து அபிவிருத்தியை உண்டாக்கலாம் என்றான். அதனால் முதலாளித்துவம் தற்காலிகமாகச் செழுமையடைந்தது. எங்கே மாக்ஸினது "முதலாளித்துவம் அந்திம காலத்தை அடைந்துவிட்டதென்ற கொள்கை" என்று கத்தினோர்கள். மாக்சீய வாதிகள் காத்திருந்து பாருங்கள் என்று சவால்விட்டார்கள்."

உண்மையிலே இன்று பொருளாதாரப் பிரச்சனை மாக்சியவாதிகளால் மாத்திமின்றி வேறு எவ்விதத்திலும் தீர்த்துவைக்கப்படமுடியாத காலகட்டத்தை அடைந்தது S.P.D. யின் வரலாற்றுத்துரோகம் மாக்சிய வாதிகளுக்கு ஒரு படிப்பினையாக இருக்கவேண்டுமென்பதை விளக்கும் பொருட்டு S.P.D. யின் கட்டுரை அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எண்ணம் இல.3**

பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தை கைவிட்டு முதலாளித்துவத்துடனான "சமாதான சகஜீவனக் கொள்கையை" ரஷ்யாவிலே லெனின் மறைவுக்குப்பின் வந்த தலைவர்கள் எல்லோரும் பின்பற்றுவதையும் அவர்கள் மேற்கொண்ட எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளையும் கண்டித்து பிரஸ்னேவின் மரணச் செய்தியில் வெளியிட்டுள்ளோம்.

எண்ணம் இதழின் உயிர்நாடியான "முதலாளித்துவம் ஏன் நெருக்குவாரத்தில்" என்னும் கட்டுரையை தமிழ் மக்களுக்கு எழுதுவதன் மூலமே விடுதலை ஊர்ஜிதம் என்பதை இரண்டு இதழின் அனுபவத்தின் பின்பு உறுதிப்படுத்தி இவ்விதழ் தொடக்கம் இன்று வரை எழுதி வருகின்றோம். இதுவே உலகில் நடைபெறும் பிரச்சனைகளின் தோற்றுவாய் என்பதை தமிழ் மக்களுக்கு திரும்பத் திரும்ப வலியுறுத்துமளவிற்கு விபரித்துவருகின்றோம். மேலும் இவ்விதழ் "U.N.P. அடுத்த வெட்டை ஆரம்பிக்க முன்பு நாம் போராட்டத்திற்கு தயாராக இல்லையெனில் நாம் அழிவது திண்ணம், தமிழ் ஈழத்தில் ஓர் வெகுஜனக் கொலையும், தொழிலாள வர்க்கக் கொலையும் செய்வதற்கு அரசாங்கம் ஒரு நல்ல நாளை பார்த்துக்கொண்டிருக்கின்றது." என்று 'சர்வஜன வாக்கெடுப்பில் ஏன் U.N.P. யை தோற்கடிக்க வேண்டுமென்ற கட்டுரையில் கூறியுள்ளோம் இந்த சரித்திர உண்மையுள்ள அந்த நாள் நடங்கிதொடங்கிவிட்டது. அது தமிழ் ஈழம் கிடைக்கும்வரை நிற்கப்போவதில்லை.

அரசியல் ஞானம் அறவே இல்லாத பல தமிழ் மக்களின் பழிச்சொற்கள் குட்டிமணிமீது வாரிவீசப்பட்டது. குட்டிமணியை கொலைகாரன், கொள்ளைக்காரனென்று அரசபத்திரிகையாளர்களும், அரசபிரச்சார இயந்திரங்களும் கடுகதியாய் இயங்கிய வேளையில் புரட்சி வீரன் குட்டிமணியைப்பாதுகாக்க ஒரு தமிழ்ப்பத்திரிகையும் முன்வராதபோது துணிச்சலோடும், கொள்கைத்திடத்தோடும் குட்டிமணியைப்பாதுகாத்து அப்புரட்சி வீரனுக்காக உரிய இடத்தை முதன்முதலில் கொடுத்தது "**எண்ணம்**" பத்திரிகை.

குட்டிமணியின் புரட்சித்தன்மையை விளங்கிக்கொள்ளாத தமிழ் மக்கள் சிலர் இன்று குட்டிமணிக்கு நடந்த கதியை அவன் கள்ளன் என்பதால் இக்கதி நேர்ந்ததா? என்பதை சீர்தூக்கிப் பார்க்க வைக்க இக் கட்டுரை அத்திவாரமிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம் இல 4

கடந்த இதழ்கள் குறித்து வாசகர்களிடமிருந்து அனேக கடிதங்கள் குவிந்தன. இவையாவும் "புரட்சியின் கருவடிவாகத்திகழும் எண்ணம்" தமிழ் ஈழச் செய்திகளை நிறையத் தாங்கிவர வேண்டுமென்று கோரிய-தின் பேரில் தமிழ் ஈழச் செய்திகள், உலகச் செய்திகள் இடம் பெறச் செய்தோம்.

அன்றைய ஆசிரியர் கருத்தில் "நாசிகளின் அட்டகாசத்தின் மத்தியிலேயே கிட்-லர் ஆட்சிக்கு வந்தாற்போல் U.N.P. காடையர்களின் அட்டகாசத்தின் மத்தி-யிலே ஜெயவர்த்தனா வெற்றியீட்டினான். உள்நாட்டு யுத்தத்தை தொடங்கலா-மென்று மெதுவாகப் பரீட்சித்து பார்த்தார்கள், ஆனால் வெகுசீக்கிரம் திரு-ம்பத் தொடங்குவார்கள். இந்த நச்சு விதை நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமும் வளரும்."

எண்ணத்தின் ஸ்தூலக சிந்தனை தமிழ் மக்களுக்கு வரப்போகும் அழிவை திரும்ப திரும்ப எச்சரிக்கை செய்தது.

## எண்ணம் இல 5

சுவிற்சலாந்து ஈழத் தமிழ் மன்றத்தை தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பொரு-ட்டும்; அவ்வியக்கத்தை வளர்த்துவிடுவது குறித்தும் அவ்வியக்கத்தால் அச்-சிடப்பட்ட 1983ம் ஆண்டிற்கான கலண்டரை அட்டைப்படமாகத்தாங்கி எண்ணம் வெளிவந்தது.

அகத்தே; பிரான்சிலிருந்து வெளியாகும் "தமிழ் முரசு" பத்திரிகையை நெறிப்ப-டுத்தும் பொருட்டு விமர்சனக் கட்டுரையொன்றை தாங்கி வெளிவந்தது.

தமிழ் முரசை விமர்சித்தமை குறித்து அது தனது நன்றியை எண்ணத்திற்கு தெரிவித்துக் கொண்டது.

தமிழ் மக்களின் விடுதலை குறித்து இயங்கும் இயக்கங்களையும், பத்திரிகைக-ளையும் நெறிப்படுத்துவதிலும் **எண்ணம்** பங்காற்றியது.

மேலும் இவ்விதழில், இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், இலங்கை ஏற்றுமதி, இறக்குமதி போன்றவற்றால் கிடைக்கும் வருமானம் செலவு உட்-பட சகல விதத்திலும் இலங்கையின் நடைமுறைப் பிரச்சனைகளை விளக்கி தமிழ் மக்கள் ஓரளவேனும் அறியக்கூடிய வகையில் "இலங்கையின் இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை" என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட கட்டுரையால் முதன் முதலில் தமிழ் மக்கள் வாழ்க்கைத் தரம் என்றால் என்னவென்பதை இவ்விதழிலிருந்து அறிந்து கொள்ளக்கூடிய முறையில் எழுதப்பட்டது.

## எண்ணம் இல 6

U.N.P. ஆட்சிக்கு வந்தால் பொருளாதாரப் பிரச்சனை இராது ஏனெனில் "அமெரிக்காவிடமிருந்து கடன் வாங்கிச் சமாளித்து விடும்" என்பவர்களின் மூளையைக் கழுவுவதற்க்காக "சுதந்திர வர்க்கத்திற்கு சாவுமணி!" என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட கட்டுரை அமைகின்றது. உலகப் பொருளாதார நெருக்கடிகளையும், ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான போட்டியையும், முட்டி மோதல்களையும் விளக்குகின்றது.

இவ் இதழில் வெளியான "முதலாளித்துவம் ஏன் நெருக்கடி வாரத்தில்" என்ற தொடர் கட்டுரை குறித்து பல கடிதங்கள் வாசகர்களிடமிருந்து பாராட்டுக்களோடு வந்து சேர்ந்தது. இவ்விதழின் 9ம் 10ம் பக்கத்தில் எம்மால் பிரசுரிக்கப்பட்ட கவிதை தமிழ் ஈழ விடுதலை இராணுவத்தின் துண்டுப் பிரசுரத்தில் பின்னர் மறு பிரசுரம் செய்யப்பட்டது.

ஆசிரியர் கருத்தில்; "தமிழ் ஈழ விடுதலை இராணுவம் சமூகத்துரோகிகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதுடன், U.N.P. போன்ற முதலாளித்துவ சக்திகளிடமிருந்தும் தமிழ் மக்களைப் காப்பாற்ற தன்னை ஓர் பலம் வாய்ந்த இராணுவமாக வளர்க்க வேண்டும்." "வெறும் குட்டி, குட்டி ஆத்திர மூட்டல்களை ஏற்ப்படுத்தி தமிழ் மக்களிடையே பெரும் அழிவுகளையும்; எதிர் சக்திகளிடம் ஒற்றுமையையும், பலத்தையும் ஏற்ப்படுத்தாமல்; எதிர்சக்திகளின் பலத்தை உணர்ந்து தன்னுடைய பலத்தை அதிகரிக்க வேண்டும். தமிழ் ஈழ விடுதலை இராணுவம் சர்வதேச ஐக்கியத்திற்கு முன்வரவேண்டும்." என்று எழுதப்பட்டது.

இவற்றை வாசித்த T.E.L.A. தலைவர் குலசேகரம் தேவசேகரம் அவசரம், அவசரமாக கடிதம் எழுதி எம்மோடு தொடர்பு கொண்டார். "புரட்சியின் வித்துக்களை இட்டுக்கொண்டிருக்கும் தங்கள் பத்திரிகையில் எம்மைப் பற்றி விமர்சித்திருப்பது கண்டு மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவிக்கின்றோம்" என்றவர் மேலும் எம்மோடு தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டார்.

எமது இயக்கத் தோழர் ஒருவர் தோழர் குலசேகரம் T.E.L.A.ஐ ஆரம்பிக்குமுன் கலந்துரையாடியவர்; இருந்தும் எமது பத்திரிகையில் அவர்கள் பற்றிய கருத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியான பின்பே எங்களுக்கிடையிலான உறவு வலுப்பெற்றது.

## எண்ணம் இல 7

சிந்தையில் கள் விரும்பி சிவ சிவ என்பது போல்
வந்தே மாதரமென்பர் - கிளியே!
மனதில் அதனை கொள்ளார் - பாரதி

மனதில் ஆட்சியாளருக்கு சாமரை வீசுவதைப்படியென்று யோசித்துக்கொண்டு தமிழ் ஈழம் வேண்டுமென்று வாய்கிழியக் கத்துவோரைப் போல அனேகரை பாரதியும் கண்டிக்கிறான், மாக்சும் கண்டிக்கிறான்.

சமவுடமைத் தத்துவம் பற்றி பாரதி கூறும் போது:

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம் உல
கத்துக்கொரு புதுமை - வாழ்க

என்பதை கூறிய எண்ணம் பாரதியின் வேறு பல கவிதைகளிலும் பொதிந்திருந்த சமவுடமைத் தத்துவங்களை வெளிக் கொணர்ந்து மாக்ஸ் கூறிய சமவுடமைத் தத்துவங்களுடன் ஒப்பு நோக்கியது.

காந்தி சுடப்பட்ட நாளில் இலங்கையின் ராஜ்சியவாதியாக இருந்த கொல்வின் ஆர்-டி-சில்வா, மகாத்மா காந்தியின் வாழ்வின் முக்கியம் பற்றி கொழும்பில் மாணவர் முன் ஆற்றிய உரையை "காந்தியார்" என்ற கட்டுரையில் பலவித கருத்தாழத்துடன் வரையப்பட்டுள்ளது.

"இனவாதத்தைத் முற்றாகவும், நிரந்தரமாகவும் ஒழிக்கவல்ல உண்மையான மாமருந்து வர்க்கப் போராட்டமே" என்று கொல்வின் தனது உரையின் ஒரு கட்டத்தில் கூறியுள்ளார்.

## எண்ணம் இல 8

"தமிழ் ஈழ சர்வதே சம்பந்தக் குழு" இயங்குவது குறித்து அடையாளம் கண்டு கொண்ட "பாக்கிஸ்தான் மக்கள் கட்சி (P.P.P)" எம்மோடு கலந்துரையாடி உறவை வலுப்படுத்திக் கொண்டது. எமது போராட்டத்தை பலப்படுத்தும் முகமாக சியாவுல் ஹக்கிற்கு எதிரான ஊர்வலத்தில் P.P.P.யுடன் இணைந்து ஊர்வலத்தில் நாம் கலந்து கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANERKENNUNG DER P.L.O.

ANERKENNUNG DER T.E.L.O. சுலோகங்களை எமது இயக்கம் தாங்கிச் சென்றது. எமக்-
கிடையிலான உறவு மேலும் வலுப்பெற்றது. அதுபோன்று நாம் ஏகாதிபத்திய-
திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுவது குறித்து அடையாளம் கண்-
டு கொண்ட பங்களாதேஷ் விடுதலை இயக்கமானது எம்மோடு கலந்துரையாட-
டலை நடாத்தி உறவை வளர்த்துக் கொண்டது. சர்வதேச உறவு
வலுப்பெறும் பொருட்டு ஆங்கிலத்தில் சில பக்கங்களாவது எழுத வேண்டு-
மென்ற நோக்கில் முதல் முதலாய் இவ்விதழ் சில பக்கங்களை
ஆங்கிலத்தில் பிரசுரிக்க ஆரம்பித்தது.

மேதினம் பற்றிய சிறப்புக்கட்டுரையொன்றை வெளியிட்டோம்.

"இன்னுமொரு பெய்ரூட் (BEIRUT)டை தமிழ் ஈழத்தில் வருந்தியழையாமல் தமிழ்
மக்கள் இம் மேதினத்தில் பாதுகாப்புத் தயாரிப்புகளை விட்டு விட்டு தாக்குதல்
நடவடிக்கைக்கு போகும் நிர்ணயித்தை எடுக்கும் நாளாக கொண்டாட
வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டது.

மேதினம் "உலக உழைக்கும் மக்களின் விடுமுறை தினமாகும். இது உலக
உழைக்கும் ஜீவன்கள் தமது உலகளாவிய போராட்ட ஐக்கியத்தை செய்-
து காட்டும் நாளாகும். 1889-ம் ஆண்டு யூலையில் பாரிசில் கூடிய இரண்டாம்
அகிலம் வருடா வருடம் மேமாதம் முதலாம் திகதியை ஆர்ப்பாட்டம் செய்யும்
நாளாக பிரகடனப்படுத்தியது. இது 1886-ம் ஆண்டு மே 1-ம் நாள் சிக்காக்கோ
தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலமே வேலைசெய்யும் உரிமை-
யை வழங்கும்படி கோரி வேலை நிறுத்தம் செய்து; அதைத் தொடர்ந்து
ஆர்ப்பாட்ட ஊர்வலம் செய்த பொழுது பொலிசினது காட்டுமிராண்டித்தனத்-
த்தாலும், துப்பாக்கி பிரயோகத்தாலும் இரத்த முலாம் பூசப்பட்ட நாளாகும்!"
என்பதை வெளிக் கொணர்ந்தது.

## எண்ணம் இல 9

ஆசிரியர் கருத்தில் "1918-ம் ஆண்டு ரஷ்ய செம்படையில் கட்டாய பயிற்சிற்கு
சென்று திரும்பிய மாணவர் பலரை லெனின் கேட்டார்." செம்படைப்பயிற்சியி-
டே எதைக் கற்றுக்கொண்டீர்கள் என்று; விடையிறுத்த ஓர் மாணவன்
துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகளை இயக்கக் கற்றுக்கொண்டதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலையும் கற்றுக்கொண்டோம். — அரசியலையும் கற்றுக்கொண்டீர்கள் என்று சொல்கிறீர்களே அதன் அர்த்தம் என்ன? "வெறுமனே மற்றவரின் கட்டளைக்கு அடிபணியாமல் எந்தச் சந்தர்ப்பத்திலே, என்ன நோக்கிற்காக அவைகளை இயக்கவேண்டுமென்று கற்றுக்கொண்டோம்."

தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக் குழுவும் மிகுந்த கட்டுக்கோப்பும், அரசியல் அறிவையும் கொண்ட சரியானதோர் பாதுகாப்பு இராணுவத்தை கட்டி வளர்க்க வேண்டுமென வலியுறுத்துகின்றது. இதன் அம்சமாகவே இயக்கங்களை நெறிப்படுத்தவும், தமிழ் மக்களை சரியான பாதையில் இட்டுச் செல்லவும் முனைந்து கொண்டிருக்கிறது.

"சரியான அரசியல் உணர்மையற்றவர்களின் கைகளில் தவழுகின்ற துப்பாக்கிகள் தமிழ் மக்களுக்கு பேரழிவையே தேடித்தரும்.

அரசியல் ஞானமும், போர்க் கருவிகளை இயக்கும் பயிற்சியும், மிகுந்த கட்டுக்கோப்பும் உடைய ஓர் பாதுகாப்புப் படையை தோற்றுவிக்க வேண்டுமென்றும், இடைமருவுக்காலங்களில் ஆத்திரமூட்டலிருந்து தப்புவதற்காக தமிழ் ஈழம் எங்கும் கண்காணிப்புக் குழுக்களை அமர்த்தவேண்டும்" என்றும் எண்ணம் குறிப்பிடப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களை நெறிப்படுத்தி, சரியான போராட்ட வடிவத்திற்குக் கொண்டுவர வேண்டியது தமிழ் மக்களது கடமை. அவற்றில் ஒன்றாக "தனி நபர் பயங்கரவாதம்" என்னும் கட்டுரையில் தனி நபர் பயங்கரவாதம் செய்யும் எல்லா இயக்கங்களையும் விமர்சித்துள்ளோம். தோட்டத் தொழிலாளர் உரிமைக்காக எப்போதாவது மறந்து கூடப் போராடத் தலைப்படாத S.J.V. செல்வநாயகத்தை 'தந்தை' என்று சொல்லிக் கொண்டு — மாக்சியம் பேசிவரும் உமாமகேஸ்வரன் இந்திய அரசால் கைது செய்யப்பட்ட போது 21.5.83. அன்று BONN-ல் நடைபெற்ற ஊர்வலத்தில் "தமிழ் நாட்டு அரசே உமாமகேஸ்வரனை விடுதலை செய்" என்ற சுலோகத்தைத் தாங்கி தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக் குழு அவ்வூர்வலத்தில் கலந்துகொண்டது. ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் பொது எதிரியிடமிருந்து எமது இளைஞரை பாதுகாக்கும் அதேவேளையில் அவர்களது அரசியலை நெறிப்படுத்தும் தனது பங்கினை "எண்ணம்" இதன் மூலம் வெளிக்கொணர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம் இல 10

ஆசிரியர் கருத்தில் "இயக்கங்களுக்கிடையே கலந்துரையாடல்களை வளர்த்துக்கொள்ளும் படி கேட்டுக்கொண்டது."

தமிழ் ஈழ விடுதலை இராணுவத்தின் துண்டுப்பிரசுரங்களும், தோழர் குலசேகரம் தேவசேகரம் எமக்கு எழுதிய கடிதங்களையும் பிரசுரித்துள்ளோம். "பாதுகாப்பு இராணுவத்தை படைப்போமென சரித்திரம் நம்மை நம்பியிருக்கின்றது!" என்னும் கட்டுரை தமிழ் ஈழ விடுதலை இராணுவ ஒப்பந்தங்களை பரிசீலிக்கவேண்டுமென்று அறிவிக்கும் திட்டமாக ஈண்டு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் பாராளமன்றத் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டாமென்று, மாக்ஸ் முதலாளித்துவ பாராளமன்றத்திலோ, பாராளுமன்றம் மூலம் சோசலிசம் கொண்டுவரலாம் என்பதிலோ எள்ளளவும் நம்பிக்கையற்றவர் கூட பாராளுமன்ற முறைகளை நிராகரிக்கவில்லை. மாக்ஸிய, லெனினிசத்தோடு பரிச்சயம் இல்லாத தமிழ் இளைஞர்களை பாராளுமன்றம் மூலம் சோஷலிசம் என்று மொஸ்கோ கம்யூனிசக் கட்சிக்காரர்களும், தேர்தலை பகிஷ்கரித்தலே மாக்ஸியம் என்று சீனக்கம்யூனிசக் கட்சிக்காரர்களும் குழப்பு, குழப்பென்று குழப்பிவிட்டார்கள். மாக்ஸ் எழுதிய "பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள்" என்ற புத்தகத்திற்கு ஏங்கல்ஸ் எழுதிய முன்னுரையின் ஒரு பகுதியை இவ்விதழில் பிரசுரித்தோம்.

இந்த எண்ணத்தின் ஆங்கிலச்செய்தியில் நிதியமைச்சர் றொனி. - டீ.மெல்லினது கையாலாகாமையையும் அவர் கூற்றின் பிரகாரம் மிலிற்டரி யுத்த அரசாங்கத்திற்கான தயாரிப்பையும் நாம் எமது மக்களுக்கும், எமது வெளிநாட்டு நட்புச் சக்திகளுக்கும் சொல்லியிருந்தோம். இலங்கை அரசானது மீளவொண்ணாத பொருளாதார நெருக்கடியில் தமிழ் மக்களை மேலும், மேலும் ஒடுக்கும் என்பதையும் நாம் புள்ளிவிபரங்களுடன் கூறியிருந்தோம். எமது கட்டச்சாளரின் ஆங்கில அறிவு பற்றாமையால் ஆங்காங்கே பிழைகள் எமது ஆங்கிலச் செய்தியில் ஏற்பட்டிருந்தது. இதனை நாம் மற்றய பத்திரிகைகளில் நிவர்த்தி செய்ய முயற்சியெடுத்தோம்.

இலாபம் கருதும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் முரண்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளையும் — இது சர்வதேச ரீதியில் ஏற்படுத்தும் அராஜக நிலைகளையும் நாம் எமது தொடர் கட்டுரையான "முதலாளித்துவம் ஏன் நெருக்கு வாரத்தில்" என்ற கட்டுரையில் இம்முறையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

## எண்ணம் இல 11

ஆசிரியர் கருத்தில் - "தமிழன் செய்தான் என்பது பிரச்சனையல்ல - தமிழர்களின் நலனுக்காக செய்யப்பட்டதா என்பதுதே பிரச்சனையாகும்" என்பதில் தொடங்கி கந்தர் மடத்து சூட்டுச்சம்பவமும், திருநெல்வேலி சூட்டுச்சம்பவமும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திய இழப்புகளைப் பற்றிய ஆய்வாக அமைந்தது. தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களானது தொழில் நுட்பத் தயாரிப்பை விடுத்து அரசியல் தயாரிப்பை செவ்வனே செய்யவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. "இன்று தமிழ் மக்கள் முழுப்பேரையும் அணிதிரட்டி எதிர்காலத்தில் நடக்கப்போவதை முன்கூட்டிச் சொல்லி அதை எதிர் கொள்ள வல்ல வேலைத்திட்டத்தோடு, அவ்வேலைத்திட்டத்தை நடைமுறையில் செய்விப்பதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும். ஆட்சியைக் கைப்பற்றி ஆட்சி செய்து, தொழிற்சாலைகள் போடுவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கத் தயாரிப்பில்லாத, வெறும் ஆயுதப் போராட்டம் நடாத்தினால் ஒரு பொழுதும் வெற்றிகிட்டாது." என்பதை ஆசிரியர் கருத்து அடித்துரைத்தது.

"தமிழீழப் போர்ராட்டத்தில் தமிழ் மக்கள் கற்றதும், கற்காததும்" எனும் கட்டுரையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப் பொம்மையாகவுள்ள சிறீலங்கா அரசு ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டலுக்கு இடமளித்து வருவதை சுட்டிக்காட்டியதுடன் "சுல்பிகார் அலிபூட்டோ" கொல்லப்பட்டதிற்கான காரணத்தையும் மூன்றுலக நாடுகளின் பசி, பிணி வளர்வதற்கான காரணத்தையும் கோடிட்டுக்காட்டியது. 1879-ம் ஆண்டு ரஷ்யாவில் நிறுவப்பட்ட நரோத்தனாவொல்யா இயக்கத்தைப் பற்றி லெனின் கூறிய கூற்றை 11-ம் பக்கத்தின் கடைசிப் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. தமிழ் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான் தமிழீழத்தை பெறமுடியும் என்பதை நிராகரிக்காத அந்தக் கட்டுரை சரியான அரசியல் சித்தாந்தமும், தத்துவார்த்த தயாரிப்பும், அரசியல் முன்நோக்கும், உலகப் பொருளாதார நெருக்கடிகளைப் பற்றிய துலாம்பரமான அறிவும் இல்லாத ஒரு கட்சியின் ஆயுதப் போராட்டத்தை அறவே நிராகரித்தது.

"நான் ஒரு வேதனை நிறைந்த ஆத்மா" என்ற கட்டுரை இந்தவருடம் பெல்கிரேட் நகரில் திருமதி இந்திராகாந்தி பேசிய பேச்சினை மொழிபெயர்த்த கட்டுரையாக அமைந்தது. இது ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறைகள் பற்றிய ஒரு தேசிய முதலாளித்துவவாதியின் எண்ண ஓட்டமாக அமைந்தது.

"புதிய தொழிலாளர்முன்னணி மலருமா" என்ற கட்டுரை தமிழ் மக்களின் எதிர் கால விடுதலைக்கான யதார்த்தத்தயாரிப்பின் உய்த்தறிந்த கணிப்பாக இருந்தது. புதிய தொழிலாளர்முன்னணி அமைப்புகளை உருவாக்க தமிழீழ சர்வதேச சம்பந்தக் குழு அன்றிலிருந்து இன்றுவரை விட்டுக் கொடுக்காது போராடுகிறது.

## எண்ணம் இல 12

பாசிச வெறியன் ஜெயவர்த்தனவின், ஆட்சியின் அட்டகாசத்தில் உயிர்துறந்த புரட்சிமணிகள் தோழர் தங்கத்துரை, தோழர் குட்டிமணி இவர்களின் படங்களை அட்டையில் தாங்கிவெளிவந்தது. ஆசிரியர் கருத்தில் "விடுதலை இயக்கங்களெல்லாம் 'ஆ', 'ஊ' என்று ஆட்களையும், பணங்களையும் சேர்க்கிறார்கள். இனக்கலவரகாலங்களின் மக்கள் சோடாபோத்தல் காஸ்மாதிரி மேலுக்குப் போய் மீண்டும் ஓய்ந்துவிடுவார்கள். இப்படியான காலங்களில் ஆட்களையும், பணங்களையும் சேர்ப்பது இலகுவான செயல்தான். சேர்க்கும் விடுதலை விரும்பிகளை விடுதலைக்காக வரலாறு முழுவதும் பாவிக்கவேண்டுமல்லவா! பாரிஸ் கம்யூன் வளர்க்கலகம் நடந்து கொண்டிருந்தபோது மாக்ஸ் புத்திமதி கூறினார். இளர்ந்தெளாதீர்கள், ஓர் இயக்கத்தை படையுங்கள்." 1917 யூலை கிளர்ச்சியெழுச்சிக்கு மத்தியில்தான் லெனின் கருவடிவில் இருந்த போல்சவிக்கட்சியை ஓர் புரட்சிகரக் கட்சியாக உருவாக்கி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளர். புரட்சிகர வேலைகளின் அங்கமும், பக்கமுமாக நிதி பொருளாதார அமைப்புகளையும் உருவாக்கிச் செல்லவேண்டும். இல்லாவிடில் ஒரு பொழுதும் எதிரிக்கு மரண அடி கொடுக்க முடியாது.

இதையே தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக் குழுவும் ஓர் சரியான, சக்தி வாய்ந்த இயக்கத்தை படைக்குமாறு வலியுறுத்துகின்றது.

புரட்சி வீரன் தோழர் குட்டிமணியின் வாழ்க்கை வரலாற்றின் புரட்சி ஏடுகளை புரட்டி தெளிவாகத் தந்துள்ளோம். தமிழ் மக்களுக்கான போ-ராட்டத்தில் குட்டிமணி ஒவ்வொரு நெருக்கடி காலத்திலும் என்னெ-ன்ன நிலைப்பாட்டை எடுத்தான்; அவன் தமிழ் மக்களுக்குச் செய்த ஒப்புவமையற்ற தியாகமும், எதிர்ப்புரட்சியாளர்களால் அவனுக்கு நட-ந்த கதியும் எல்லாத் தமிழ் நெஞ்சங்களையும் புல்லரிக்கும் விதத்திலே வித்திட்டது. தோழர் குட்டிமணியின் மறைவு குறித்து **"எண்ணம்"** நண-து இதழிலே, "தமிழ் இனம் உங்களுக்கு தலைதாழ்த்துகிறது" என்று-ம் தலைப்பின் கீழ் ஓர் இரக்கமான அஞ்சலியை சமர்ப்பித்துக்கொண்டது. அத்தோடு புலி இயக்கத்தால் அடப்பட்ட தோழர் தேவசேகரத்தின் இழப்பு தமிழ் மக்களை அநாதைகளாக, நடு ஆற்றிலே கைவிட்டு விட்டதாக நாம் கூறிவைக்கிறோம்.

பல நாட்டான் அரசியல்வாதிகள் இருந்தும் தமிழ் மக்களுக்கான போராட்டத்திற்கு ஓர் இராணுவம் தோற்றுவிக்கவேண்டுமென்ற முன்னோக்    இல்லாமற் போய்விட்டது கண்டு; தோழர் தேவசே-கரம் அவ்வத்தியாவசிய கருவை உண்டாக்கிய பெருமையை பெற்று-க்கொண்டவரின் இழப்பு குறித்து ஆழ்ந்த கவலையை நாம் தெரிவிப்ப-தோடு "தோழர் குலசேகரம்" என்ற கட்டுரையில் அவருக்கான மரி-யாதையை வழங்கி எழுதியுள்ளோம்.

தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக் குழு

தனது ஒரு வருட அரசியல் ஞானத்தின் உள்ளடக்கத்தால் பத்திரி-கை தவிர துண்டுப்பிரசுரம் விசேஷ இதழ் சிறப்பாக "அமிர்தலிங்கம்" என்ற புத்தகமும் வெளியிட்டுள்ளது. 31-5-83ல் அன்று (BONN) பொன்னில் நடந்த ஊர்வலத்தின் போது எம்மால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் இவ்வாறு ஆணித்தரமாக கூறியுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" Now the Government and the Imperialist masters are planning to make another mass September massacre like in Beirut. The Government and it's conspirators are planning and breeding another racial holocaust."

அரசியல் சூழ்நிலைகளையும், சரித்திர நிலைமைகளையும் முன்வைத்து தொலைதூர நோக்குடன் சிந்தித்து பின்பு வரப்போகும் அழிவை முன்பே அறிவித்துக் கூறுபவன்தானே உண்மையான சமூக விஞ்ஞானி. தமிழ் மக்களிற்கு வரப்போகும் அழிவை காலநேரங்களுடன் அடிக்கடி எச்சரிக்கை செய்தோம். எமது நோக்கம் விசாலமானது. அதன் சிறுதுளிகளையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

23-5-83 அன்று கந்தர்மடச் சம்பவத்தையொட்டி விசேட இதழ் ஒன்றை வெளியிட்டுள்ளோம். பலரும் பலவாறான வதந்திகள் கிளம்பியபோதும்; சரியாக, உண்மையாக நடந்ததை நடந்த மாதிரியே வெளிக்காட்டியது. தமிழ் மக்கள் மீதான வேள்விக் காலம் பழையபடி தொடங்கிவிட்டது." இது இதை விருப்பத்தை எமக்கும் தமிழ்மக்களை நயின்றுவிடாதீர்கள். சரியானதோர் இயக்கத்தைப் படைக்குமாறு கோரியிருந்தோம்.

தமிழ்மக்களின் பிற்போக்குத்தனத்துக்கும்; எமக்கு இதுவரைகாலமும் விடுதலை கிடைக்காமைக்கும்; அநாதரவான ஒரு அவுன்ஸ் தயாரிப்புக்கூட நடைபெறாததற்கும் காரணம் யார் எமது நேரடி எதிரி அமிர்தலிங்கமும், அவர்களின் முன் வழித்தோன்றியவர்களும், கூட்டணியுமே. நெருக்கடியான சரித்திரச் சிக்கல் நிறைந்த காலத்தில் தமிழ்மக்களின் பிரதிநிதியென்ற பொறுப்பை ஏற்று, விடுதலைக்கான தயாரிப்பை செய்யாது, அரசுடன் ஒத்துழைத்து தமிழ் மக்களை J.Rக்கும், ஆயுதப்படையினருக்கும், காடையர்களுக்கும் அடிமைச் சாசனம் எழுதிவிட்ட அமிர்தலிங்கத்தின் துரோகங்களை தனியொரு "அமிர்தலிங்கம்" என்ற புத்தகத்திலே எழுதியுள்ளோம்.

எந்தவொரு விடுதலை இயக்கங்களும் அமிர்தலிங்கத்தை தமிழ்மக்களிடமிருந்து தோலுரிக்க தந்திரோபாயமும், திட்டமும் இல்லை. இருக்கு அமிர்தலிங்கத்தின் இல்லா முகங்கள் தெரிந்தும், காவலைத்தாங்கி எழுதக் கூடாது என்ற பயமும் பீதியும் இருக்கும் வேளையில் அமிர்தலிங்கத்தை அரசியல் வானிலிருந்து அகற்றாமல் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் விடுதலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்பதை எமது முழுமையாய் அவரை தோற்கடிக்கும் பொருட்டு "அமிர்தலிங்கம்" என்ற புத்தகத்தை துணிச்சலோடு முதன் முதலாக நாம் வெளியிட்டுள்ளோம்.

குழந்தை பிறந்து அதன் மழலைச்சொல் கேட்டாற் போல் தமிழ் இனத்தின் வாயிலிருந்து அறியாச் சொற்கள் உதிருமளவிற்கு "எண்ணம்" பணி புரிந்தது.

சர்வதேசியம், உலகப்புரட்சி, ஏகாதிபத்தியம், உலக வங்கி, சர்வதேச நாணயசபை, ரொக்கியம், காலனித்துவம், நவ காலனித்துவம், சோவனிசம், சியோனிசம், C-I-A, S-A-S, K-G-P, திரிபேதனம், ஸ்டாலினிசம் போன்ற சொற்கள் தமிழ் மக்கள் வாயிலிருந்து உதிர்வதை இன்று நேரடியாகக் காணக்கூடியதாய் இருக்கின்றது. இவர்களை அறியாமலே எண்ணம் தன் பணியைக் காட்டியது.

ஏராளமான வாசகர்களிடமிருந்து கடிதங்கள், பாராட்டுக்கள் வந்தன. "எண்ணம்" பற்றிச் சுருங்கச் சொல்வதாயின் "புரட்சியின் விதைகள் இப்போதுதான் புரட்டப்படுகின்றன" என்ற வாசகம் நிறையப் பேரிடமிருந்து வந்துள்ளன.

இலங்கைப் பிரச்சினையும், உலகப் பிரச்சினையும் பின்னிப் பிணைந்து சகல விதத்தோனை வழிவகுத்திடும் விடுதலை எடுக்கும் திட்டங்களைக் கொண்டதாக எமக்கு கருத்துக்களை அள்ளி வீசும் "எண்ணம்" வாழ்கவென பலரும் வாசகர்கள் வாழ்த்தினார்கள். அத்தனை பேரின் கடிதங்களையும் இங்கு எழுதுவதாயின் "எண்ணம்" பத்திரிகையில் இடமடங்காது. "எண்ணம்" பற்றி ஆய்வு மேலும் செய்வதாயின் அத்தனையும் சிறப்பானதுதான்.

பத்திரிகையின் திட்டம்; இதனது "பட்டறிவுத்தனத்தை" வெளியிடுவதாக நினைப்பவர்கள் அதன் மெய்ப்பொருளை புரிந்து கொள்ள அறவே தவறி விடுகிறார்கள் — லெனின்

பிரச்சினைகள், கிளர்ச்சிகள் நடக்கும் மிக முக்கியமான நேரங்களில், அவ்வவ் நேரங்களில் என்னென்ன நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்பது இயக்கங்களிற்கு இருக்க வேண்டிய தலையாய கடமையாகும். அந்நிலைப்பாட்டை மக்களுக்கு தெரியப்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் அது ஒரு உண்மையான ஒரு வெகுஜன இயக்கமாகப் பரிணமிக்க சக்தியுடையதாகும். இதன் பேரில் "எண்ணம்" தனது நோக்கத்தைச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவுடமைப் பொய்கை

கம்யூனிஸ் கட்சியின் அறிக்கையே மாக்சீயத்தின் மூலநூலாகும். இது 136 வருடங்களுக்கு முன்பு கால்மாக்சாலும் பிடெரிக் ஏங்கல்ஸ்சாலும் எழுதப்பட்டதாகும். இதைப்பலதடவை வாசிக்காத ஒருவனால் விஞ்ஞான சோசலிசத்தின் அடியையோ, நுனியையோ புரிந்து கொள்ள முடியாது. எங்கணும் புரட்சி மணம் கமழும் இந்நூலின் மேதாவிலாசமே 19ம் நூற்றாண்டில் கருவடிவில் இருந்த கம்யூனிச இயக்கத்தின் ஆணிவேராக அமைந்தது. இது முதலாளித்துவ அமைப்புத் தகர்ந்து போகும் தவிர்க்க முடியாத தன்மையை அறைந்து கூறியதோடு புரட்சிக்கு வேண்டிய அத்திவாரத்தையும் மிகச் சர்வானுகூல நோக்கோடு வரையறை செய்தது.

இந்த நூலை இதுவரை காலமும் ஒரு தடவையாவது வாசியாது தம்மை புரட்சிவாதிகள் என்று கூறும் எந்த தமிழ் விடுதலை இயக்கத்தின் அங்கத்தவன் ஆனாலும் சரி, சந்தேகம் இல்லாமல் எதிர் புரட்சிக்கே வழி கோலி விடுவான். இன்று தாம் மாக்சிய, லெனினிச வாதிகள் என்று கூறிக் கொள்ளும் எந்த விடுதலைவிரும்பியும் இந்நூலை ஐயந்திரிபற கற்றுணருவதால் மாக்சியத்தின் அடிநாதமான வர்க்க முரண்பாட்டை புரிந்து கொள்வதோடு சோசலிசத்தை நிர்மாணிக்க வல்ல சக்தி தொழிலாள வர்க்கத்திடம் தான் இருக்குமென்பதை நெஞ்சத்தில் ஜீரணித்துக் கொள்வான்.

இன்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் தத்துவார்த்த ஆசிரியர்கள் என்று பலரு சாற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கொள்பவர்கள், என்றுவது தொழிலாள வர்க்க போராட்டங்களோடு தங்களை ஐக்கியப்படுத்திய அனுபவம் இல்லாதவர்கள், எவ்வாறு வஞ்சனையாக தமிழீழ விடுதலை விரும்பிகளை பலிக்கடாக்களாக்கி விடுகின்றனர் என்பதை இப்புத்தகத்தை வாசித்த ஒருவரால் தான் புரிந்து கொள்ள முடியும்.

மாக்சும், ஏங்கில்சும் 1847ம் ஆண்டு (LEAGUE OF THE JUST நீதிக்கழகத்தால் அழைப்பித்து விடுக்கப்பட்டு, நீதிக்கழகத்தை தத்துவரீதியாக மாற்றியமைக்கும்படி வேண்டப்பட்ட பொழுது அவரது முதலாவது போராட்டமே லீக்கின் இலட்சனையாகவிருந்த "எல்லா மனிதர்களும் சகோதரர்கள்" என்ற சுலோகத்தை மாற்றி "உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்" என்ற சுலோகத்தைச் சூட்டியது தான். மாக்ஸ் ஒடுக்குவோரையும், சுரண்டுவோரையும் சகோதரர்களாக கருத முடியாதென்றும் அவர்களை எதிரிகளாகப் பிரகடனப்படுத்துவதே மாபெரும் தொண்டென்றும் நிர்மாணிக்க யுத்தத்தை தொடுத்தவராகும். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் பிரதம அங்கிரமே இந்த "உலகத் தொழிலாளர்களை ஒன்று படுங்கள்" என்பது தான். இந்த முடிவுக்கு மாக்ஸ் தற்செயலாகவோ விசர்த்தனமாகவோ வந்துவிடவில்லை. அவர் பலவிதமான பொருளாதார நிபுணர்களது அரசியல் பொருளாதாரம் பற்றிய ஆய்வுகளிலிருந்து ஓர் அசைக்க முடியாத முடிவுக்கு வந்தார். அது தான் நவீன கால சமுதாயத்தில் வளர்ச்சி கொள்ளும் பிரச்சனைகள் எல்லாம் "பண்டங்கள்" (COMMODITY) உற்பத்தி செய்வதால் மாத்திரமே என்ற முடிவு. இந்தப்பண்டங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக் கொள்வனவு செய்வதிலும் விற்பனவு செய்வதிலுமே சமுதாய ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் கருக்கொள்கின்றன. மாக்சினது பிரகடனம் என்னவெனில் கொள்வனவிற்கும் விற்பனவிற்கும் (PURCHASE AND SALE) இடையே பலாத்காரமாக ஐக்கியத்தை நிர்மாணிப்பதன் ஓர் அங்கமாகவே உற்பத்திமுறை தொடர்வதால் ஒன்று மற்றதிலிருந்து சுயதீனமடைய முடியாததன் பிணைப்பே முரண்பாடுகள் விஸ்வரூபம் எடுப்பதன் தாற்பரியமாகும். மாக்சினது பார்வையில் இந்த சமுதாயமானது பண்டங்களால் (COMMODI-TY) நிரம்பி வழியும் சமுதாயம் ஆகும். முதலாளித்துவ - சமுதாயத்தின் செல்வமென்பது இந்தப் பண்டங்களின் திரட்சியே. மாக்ஸ் உற்பத்திபற்றிய மற்றைய எல்லா வித கருதுகோள்களையும் அறவே நிராகரித்தார்

இந்த அறிக்கையை மாக்ஸ் எழுதும்பொழுது மாக்ஸுக்கு 29 வயதாகும். ஏங்கல்சுக்கு 27 வயதாகும். இந்த அறிக்கையானது பிரமிக்கத்தக்க மேதாவிலாசத்தோடு எழுதப்பட்டுள்ளது. வரிக்குவரி அதன் எழுத்துக்கள் ஒற்றோ எழுதியதைப் போல் பளிச்சிடுகின்றன. அதன் அதிகமான பகுதிகள் இன்றைக்கும் பொருந்துவனவாகவுள்ளன. அவர்களது அன்றைய பார்வையைவிட அவர்களைப் போலத் தூரதிருஷ்டியுடைய யதார்த்த எழுத்தாளர்கள் இதுவரை அவனியில் தோன்றவில்லை. அதன் இலக்கியச் சுவையை எண்ணெண்றெடுத்துரைப்பது. கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையைப் போலப் புத்தொளி வீசும் ஒரு புரட்சிகர இலக்கியத்தை ஒரு புரட்சியாளனால் கண்டுகொள்ள முடியாது. அதை இன்று வரை வாசியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனுக்கு மாக்சிய லெனினிசம் அறவே தெரியா என்று அடித்துக் கூறிவிடலாம்.

அந்தப் புத்தகத்தின் சாராம்சத்தை யாராவது சுருக்கி எழுத முற்பட்டால் அந்தப் புத்தகத்தை அங்கச்சிதைவு செய்வோராகவே மாறிவிடுவர். அதிலுள்ள ஒவ்வொரு வசனமும் தங்கக் கோவைகள் எனலாம். வசன நடையும் சொல்லாட்சியும் கவித்துவமும் நயம்தொனிப்பதாகவுமே அமைந்துள்ளது. அதன் தொடக்க வசனமே தொல்லுறுப்பொருள் அணியில் தொடங்குகிறது "ஐரோப்பாவை ஆட்டுகிறது ஒரு பூதம்" – கம்யூனிசம் என்னும் பூதம். போப்பாண்டவரும், ஜாரரசனும், மெட்டர்னிஹும் கிஸோவும் பிரெஞ்சுத் தீவிர வாதிகளும், ஜெர்மன் உளவாளிகளுமாய், பழைய ஐரோப்பாவின் சக்திகள் அனைத்தும் இந்தப்பூதத்தை ஓட்டுவதற்காகப் புனிதக் கூட்டு சேர்ந்திருக்கின்றன.

இதிலுள்ள பெயர்களை இடம்பெயர்த்தால் அது அப்படியே இலங்கை அரசுக்கும் பொருந்தும். "மக்களைத் தன் பக்கத்தில் திரள செய்யும் பொருட்டு பிரபுக்குலத்தோர் பாட்டாளியின் பிச்சைத்தட்டினை கொடி போல் தமக்கு முன்னால் உயர்த்திக் காட்டினர். ஆனால் மக்கள் அவர்களோடு சேர்ந்த போதெல்லாம் அவர்களது முதுகுப்புறத்தில் பழைய பிரபுத்துவ இலச்சினைகள் இருக்கக்கண்டார்கள். உடனே மரியாதையின்றி வாய்விட்டு சிரித்தவாறு அவர்களிடமிருந்து ஓடினார்கள்" "வரலாற்றின் வழிவந்த ஒவ்வொரு சகாப்தத்திலும் அப்போது நடப்பிலுள்ள பொருளாதார உற்பத்தி, பரிவர்த்தனை முறையும் இதிலிருந்து இன்றியமையாதவாறு பெறப்படும் சமுதாய அமைப்பு முறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அந்த சகாப்தத்தின் அரசியல், அறிவுத்துறை வரலாற்றின் அடிநிலையாகிறது. இந்த அடிநிலையிலிருந்து மட்டுமே அந்த அரசியல் அறிவுத்துறை வரலாற்றினை விளக்க முடியும். ஆகவே மனித குல வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களது, சுரண்டும் வர்க்கங்கட்கும், சுரண்டப்படும் வர்க்கங்களுக்கும், ஆளும் வர்க்கங்களுக்கும் ஆளப்படும் வர்க்கங்களுக்கும் இடையிலான வரலாறு ஆகும். இந்த வர்க்கப் போராட்டங்களது வரலாறானது பரிணாமங்களின் தொடர் வரிசையாய் அமைந்து தற்போது வந்தடையப் பெற்றுள்ள கட்டத்தில் சுரண்டப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வரும் வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கம் சுரண்டியும் ஒடுக்கியும் வரும் வர்க்கமாகிய முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்திலிருந்து தனது விடுதலையைப் பெற வேண்டுமாயின் அதே போது சமுதாயம் முழுவதையுமே எல்லா விதமான சுரண்டலிலிருந்தும், ஒடுக்குமுறையிலிருந்தும் வர்க்கப் பாகுபாடுகளிலிருந்தும், வர்க்கப் போராட்டங்களிலிருந்தும் முற்றாகவும் முடிவாகவும் விடுவித்தே ஆக வேண்டும் என்றாகியுள்ளது.

இதுவே மார்க்சியத்தின் தாரக மந்திரம் ஆகும். இங்கேயே அது தேசியவாதத்திற்கும், சர்வதேசியவாதத்திற்கும் இடையேயுள்ள எல்லைக் கோட்டை ஸ்தூலமாகக் காட்டி விட்டது. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை நிராகரிக்க மார்க்சியம் எந்த நெளிவு சுளிவையும் விட்டு வைக்கவில்லை. தமிழீழ விடுதலை என்றும் மார்க்சிய லெனினிசமென்றும் கூறி இன்றைய புதிய தமிழ்ப்பரம்பரையை ஏமாற்றி வருபவர்களது கபட வலையிலிருந்து தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டுமானால் கரிசனையுடைய விடுதலை விரும்பிகள் ஒரு தடவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை வாசித்தால் புரிந்து கொள்வர். இன்றைய சூழ்நிலையில் அழிந்து கொண்டிருக்கும் தமிழினத்திற்குச் செய்யும் முதலாவது உதவி இதுவேயாகும்.

கம்யூனிசப்புரட்சியில் ஆளும் வர்க்கமும் அதன் நேர் மறை முக ஏஜெண்டுகளும் அழிந்து சாகட்டும். ஒடுக்கப்பட்ட வர்க்கத்திற்கு என்ன இருக்கிறது இழப்பதற்கு. மேலும் வெல்வதற்கு ஓர் உலகமே காத்திருக்கிறது "உலகப்பாட்டாளிகளே ஒன்று சேருங்கள்"

# மீண்டும் பிரதேசவாதமா?

'சாதிச் சண்டை போச்சோ? - உங்கள்
சமயச் சண்டை போச்சோ?
நீதி சொல்ல வந்தாய்! - கண்முன்
நிற்கொணாது போடா!" (பாரதி)

பாரதியின் இப்பாடலொன்று போதுமானதாகும் தமிழ்மக்களின் பிற்போக்குத்தனத்தை கண்ணாடிபோல் காண்பிக்க. பிரதேசவாதம் வேண்டாம், சாதிச்சண்டை வேண்டாம், சமயச் சண்டை வேண்டாமென்று பாரதி இடையறாது போராடினான்; தணிந்து விட்டதா?

ஒடுக்குமுறை அதிகாரம் எங்கிருந்து பிறக்கிறது? அதை இரகிப்பது எப்படி? எப்படி அதைத் தோற்கடிப்பது இவையெல்லாம் தேவையற்ற பிரச்சனையாம்;

U.N.P ஆயுதப்படைகளும், காட்டுமிராண்டி J.R உம், காடையர்களும், இன்று சுவிற்சலாந்தில் வாழும் தமிழர்களுக்கு எதிரிகளாகத் தென்படவில்லையாம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபுறத்தில் சிறி லேதனத்தின் ஒடுக்குமுறையும், மறுபக்கத்தில் ஏகாதிபத்திய, முதலாளித்துவ படுகொலைகளைத் தமிழ் மக்களை சுட்டெரிக்கின்றன என்பதைப்பற்றி கவலையில்லையாம்;

இப்படி ஆயிரம் பிரச்சனைக்குமத்தியில், சுவிற்சலாந்தில் வாழும் தமிழ்மக்களில், யாழ் மக்களுக்கும் - தீவுவாழ்மக்களுக்கும் இடையே பிரதேசவாத ஏற்பட்டது வருந்தத்தக்கது.

தற்போதைய வரலாற்றுக் காலகட்டத்தில் "நாம் என்ன செய்ய வேண்டும்" என்பதை ஒருமுறை சிந்திப்போமானால் "விடுதலைக்குத் தயார்" என்ற பதிலே கிடைக்கும்.

தற்காலிக ஆத்திரமூட்டலுக்கு அடிபணியாது; உயர்ந்த பண்புள்ளவர்களாய் "புரட்சிகர கலாச்சாரப்" பண்பை மனதில் வளர்த்துக் கொண்டு உங்கள் சக்திகள் அனைத்தையும் விடுதலைக்கு பயன்படுத்துவதே சரியான வழியாகும்.

ஆகவே தோழர்களே! எமக்குள் சிறு சிறு பிணக்குகளை உண்டாக்காமல், பிரதேசவாதத்தை தூக்கியெறிந்து நாம் ஒன்றுபட்டு தமிழீழத்தை வென்றெடுப்பதற்கான பிரயத்தனத்தில் எம்மது சக்தியை அர்ப்பணிப்போமாக.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வாழ்ந்தாற்பின் நமக்கெது வேண்டும்"
(பாரதி)

தமிழீழ சர்வதேச சம்பந்தக் குழுவாகிய நாம் உங்கள் பகைமையை நீக்கி விடுதலைக்கு தயாரிக்கும்படி தமிழ் மக்கள் பேரால் வேண்டுகின்றோம்.

(இக்கட்டுரை சுவிற்சலாந்து வாசகரின் கடிதத்தின் பேரில் பிரசுரிக்கப்படுகின்றது).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEWS AT SIGHT

## SriLanka

The tamil liberation fighters has broken the iron bars of the concentraion camp at Batticoloa and released the tamil political prisoners. The state apparatus of the SriLankan racialist goverment had begun to disintegrate. Another incident took place in Vavunia, a truck full of politcal prisoners have been rescued by the liberation fighters. The totally disintegrated SriLankan Economy had rouse the hatred of the SriLankan Working class and the oppresed tamil masses have paved the con dltlon for a united fight. In the mean time all the tamil liberation organisations had anounced that they are ready to unite with the SriLankan working class. This incident had nullified the *condition of compromise proposed by the Indian* bourgeoisie.

## Pakistan


Pakistani military dictator General Zia-Ul-Haq has threatened to use an iron hand against "mischeif-mongers" after his motor cade was stoned in Dadu town in Sind province. Anti-government protesters threw rocks as Zia visited the town Dadu before coming to Hyderabad. The 6 weeks old anti goverment activities continues further.

## Morocco

Morocco forces lost 37 dead and 40 wounded during a three-day battle with "Polisario" fighters near the western Sahara town of Smara last month.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Chile** Mass demonstration in Chile and around the world marked the tenth anniversery of the bloody military coup which ousted former President Salvador Allende. Chilean riot police charged into a Santiago ,cemetery firing tear gas grenades to break up a crowd of more than 10,000 workers and youngsters attending the funeral of a man gunned down by police during protests against President Angusto Pinochet's rule. The French daily news paper"Liberation's" Lady reporter Marie-Christine Raitberger was also assaulted during this funeral. The copper miners of Chile are demanding the release of their leader Rodolfo Seguel and the anti-goverment activities continues further.

USSR-USA

The US state department at last admitted that tape allegedly of conversations by Soviet pilots tracking the Korean airliner were doctored in transilation. Crucially they admit that the soviet fighters did fire warning tracer shots along the air Liner's flight paths. The soviet pilots interviewed in television repeated charges that the plane was on a spying mission over the Soviet island of Sakhalin where there are army, navy and airforce bases.

ElSalvador

FMLN fighters have penetrated deep in to the south with a series of daring raids over the last few days. They seized Jucuran, a city 80 miles south east of San Salvador.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

மட்டக்களப்பு சிறைச்சாலையை உடைத்து, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளை விடுவித்தனர்.

இராணுவ உடையில் ஆயுதங்களுடன் வந்த சுமார் 28 பேர் மட்டக்களப்பு சிறைச்சாலைப் பாதுகாவலர்களை ஆயுத முனையில் கட்டிப்போட்டுவிட்டு, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 42 பேரில் 37 பேரைக் கடத்திக் கொண்டு சென்றுவிட்ட சம்பவம் 23.09.1983 வெள்ளிக்கிழமை இரவு 7.45 மணியளவில் நடைபெற்றது.

மேற்படி சம்பவத்தைப் பயன்படுத்தி சுமார் 204 சாதாரண கைதிகளும் தப்பி ஓடினராயினும், பொலிஸ் அறிவித்தலின் பின் 93 சரணடைந்துள்ளனர். எனினும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களில் 37 பேரும் தப்பிவிட்டனர். இவர்களை வேறுநாட்டுக்கு கடத்திக் கொண்டு போய் விட்டதாக லண்டனில் இருந்து வந்த அநாமதேய டெலிபோன்கள், மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்துள்ளனர். மேலும் தொலைபேசியில், மட்டக்களப்பு மக்களை துன்புறுத்த வேண்டாமெனவும் கேட்டுக் கொண்டனர்.

வண. பிதா. சிங்கராயர், டாக்டர் ஏ.எஸ். தர்மலிங்கம், கோவை மகேசன் ஆகியோர் மேற்படி வாலிபர்களுடன் வெளியேற விரும்பவில்லை எனவும், அவர்களை எதிர்த்தும் பேசினார்கள். திருமதி. நிர்மலா நித்தியானந்தன் பெண்கள் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததால் வாலிபர்களுடன் வெளியேற முடியவில்லை.

கடத்திச் செல்லப்பட்டவர்களில் வண. பிதா. சின்னராசா, வண. பிதா ஜெயதிலகராஜா, விரிவுரையாளர் நித்தியானந்தன், விரிவுரையாளர் வரதராஜப்பெருமாள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர். ஜெயகுலராஜா, காந்தீய இயக்கத் தலைவர் எஸ்.ஏ. டேவிட், வி. சுப்பிரமணியம், ரி. மகேஸ்வரன், எஸ். இராஜாஜி, என். ஜெயப்பிரகாஷ் ஆகியவர்களும் அடங்குவர்.

சிறைச்சாலையின் மேல்மாடியில் இருந்து 37 பேரையும் கடத்திக் கொண்டு கீழ்மாடிக்கு வந்த இளைஞர்கள், மற்றைய சிறைக்கதவுகளையும் துப்பாக்கிப் — பிரயோகம் செய்து விட்டு "நாங்கள் சென்ற பின்னர் இராணுவத்தினர் வந்து உங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வார்கள் எனவே ஓடிவிடுங்கள்." என்று அவர்களையும் விடுவித்தனர்.

## விமானப்படைக்கு மேலும் ரூபா 25 கோடி செலவாகும்

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், இலங்கையில் தற்சமயம் விமானப்படையினர் வசமுள்ள விமானங்கள் 12 முதல் 15 வருடங்கள் பழமை வாய்ந்தவை ஆதலினாலும் இப்பணத்தைக் கொண்டு புதிய விமானங்கள், ஹெலிகொப்டர்கள் வாங்குவது அவசியமாகின்றதென்றும் பிரேமதாஸா விமானப்படைக்கு ரூபா 25 கோடி ஒதுக்கீடு பற்றி பாராளுமன்ற நடந்த விவாதத்தில் குறிப்பிட்டார். நாட்டுமக்கள் அன்றாடம் வாழ்வதற்கே போராடிக் கொண்டிருக்கும் போது. அதே நேரத்தில் சென்ற கலவரத்தினால் நஷ்டமடைந்த 1 பில்லியன் ரூபாவும், வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் 2800 கோடி ரூபாவும் நாட்டுமக்களின் தலையில் கட்டும் போது மேற்படி 25 கோடி ரூபாவையும் மக்களின் தலையில் கட்டுவதென்று அரசாங்கம் தீர்மானித்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொரிஷியஸ் அரசியல் ஆதரவு கொடுக்கும்

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மொரிஷியஸ் அரசியல் ஆதரவு கொடுக்குமென அந் நாட்டின் உதவிப் பிரதமர் சேர் கேயடான் துவால் புதுடில்லியில் நிருபர்களிடையே கூறினார். அண்மையில் இலங்கையில் நடந்த இனக்கலவரங்களை தொடர்ந்து அங்குள்ள நிலைமை குறித்து தாம் மிகவும் கவலை கொண்டுள்ளதாகவும் நிருபர்களிடையே மேலும் கூறினார்.

## அவசரகாலச் சட்டம் நீடிப்பு

நாட்டில் 'அவசரகாலச் சட்டம்" 5வது முறையாக புதுப்பிக்கும் வகையில் ஜெயவர்த்தனவினால் வர்த்தமானி மூலம் 17.09.83 அன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மே மாதம் 18ம் திகதி பாராளுமன்ற, உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் நடந்த அன்று மாலையே முதல் முதலாக இச் சட்டம் சமீபத்திய காலத்தில் பிறப்பிக்கப்பட்டது.

## மின்னியக்க இயந்திரம் அபகரிப்பு

13.09.83 அன்று பிற்பகல் 2 மணியளவில் காங்கேசன்துறை, துறைமுக வேலைத் தளப் பகுதிக்குள் பிரவேசித்த ஆறு இளைஞர்கள் அங்கிருந்த நான்கு காவலாளிகளையும் பயமுறுத்திய பின் "வெல்டிங்" செய்யப் பயன்படுத்தும் விலையுயர்ந்த மின்னியக்க இயந்திரமொன்றை துப்பாக்கி முனையில் அபகரித்துச் சென்றனர். படகின் மூலமாகவே துறைமுகத்திற்கு வந்தார்களெனவும், படகின் மூலமாகவே மின்னியக்க இயந்திரத்தையும் கொண்டு சென்றார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் பொலிஸ் ஸ்டேசனில் மோதல்

யாழ் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ்காரர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து மோதலின் பின்னர் மோதிக் கொள்ளவே ஒருவர் ஆஸ்பத்திரியிலும் மற்றவர் இடைநிறுத்தமும் செய்யப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலைய மாணவர் கல்வி பாதிப்பு

கடந்த யூலை, ஆகஸ்ட் மாதக் கலவரங்களினால் மலையக மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்படி பாடசாலைகளில் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த அநேக ஆசிரியர்களே கடமையாற்றிக் கொண்டிருந்தார்களாகையால், ஜூலை 24 இற்குப் பின்னர் வகுப்புகள் எதுவும் நடைபெறவில்லை எனவும், குறிப்பாக க.பொ.த (சாதாரண), க.பொ.த (உயர்தர) வகுப்புகள் நடைபெறாததால் இம்முறை பரீட்சைக்குத் தோற்றுவோர் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். அத்துடன் மேற்படி அசம்பாவிதங்களால் ஆசிரியர்களும் மாணவர்களும் மனோ ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என தொழிலாளர் தேசிய சங்கப் பொதுச் செயலாளர். திரு. பி.வி. கந்தையா கவலை தெரிவித்துள்ளார்.

## 20 வருடசேவை முடித்த அரசு ஊழியருக்கு ஓய்வு பெற அனுமதி

வன்செயலால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்ற அரச ஊழியர்களில் 45 வயது நிரம்பியவர்களுக்கும் அல்லது 20 வருடகால சேவையை பூர்த்திசெய்தவர்களும் தம் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள அரசாங்க திணைக்களங்கள், காரியாலயங்கள் ஆகியவற்றின் மேற்படி வெற்றிடங்களை வன்செயலால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து சென்றவர்களைக் கொண்டு நிரப்புவதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

## மூன்று அம்சத்திட்டம்

தமிழ் பிரதேசங்களில் அமைதியை நிலைநாட்ட மூன்று அம்சத்திட்டமொன்று சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவரால், அரசாங்கப் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதில் பயங்கரவாதத் தடை சட்டத்தை 6 மாதத்திற்கு ஒத்திவைக்கவேண்டுமென்பதும் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சையை பகிஷ்கரித்துக் கொண்டிருக்கவேண்டும் என்பது எமது நோக்கமல்ல — தமிழ் ஈழ நாகப்படை

" சமீபத்தில் நடைபெற்ற கலவரங்களைத் தொடர்ந்து தென் இலங்கை பல்கலைக் கழகங்களில் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு திரும்பி உள்ள தமிழ் பட்டதாரி மாணவர்களின் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது. தமிழ் மாணவர்கட்கு வசதியாக பரீட்சைகளை மட்டக்களப்பு, யாழ் பல்கலைக் கழகங்களில் நடைபெறவேண்டுமென்ற கோரிக்கை இதன் மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இப்போது தென்இலங்கையில் நடந்துவரும் பரீட்சைகளில் சிங்கள மாணவர்கள் மாத்திரமே கலந்து கொள்கின்றனர். இது தமிழ் மாணவரின் கல்வியை பாழடிப்பதற்கு திட்டமிட்டு நடக்கும் முயற்சியாகும். இந்நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கு முகமாக பரீட்சையில் கலந்து கொள்ளவேண்டாமென நாங்கள் கோருகின்றோம். ஆனால் பரீட்சைகளை பகிஷ்கரித்துக் கொண்டிருக்கவேண்டுமென்பது எமது நோக்கமல்ல" என மட்டக்களப்பில் தோன்றியுள்ள "தமிழீழ நாகப்படையினர்" வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

வேறு நாடு படை எடுத்தால் இந்தியா பார்த்துக் கொண்டிராது!-

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கடராமன்.

" உலக அமைதியை காக்க வேண்டுமென்று இந்தியா கருத்துக் கொண்டிருப்பதால் மற்ற நாட்டின் ஒரு சிறுபகுதியிலும் இந்தியா படையெடுக்காது என்றும் வேறு எந்த நாடு படையெடுத்தாலும் இந்தியா பார்த்துக் கொண்டிருக்காது. ஐ.நா. சபை இலங்கைக்கு அதன் படையை அனுப்ப வேண்டுமென்றால் அதற்கான கோரிக்கையை அந்நாட்டு அரசாங்கமே விடுக்கவேண்டும். இம்மாதிரி விடயத்தில் மூன்றாம் நாடு படை அனுப்ப கோர முடியாது" என இந்திய பாதுகாப்பு அமைச்சர் சென்னையில் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்கள் சிங்களவர்களைக் கண்டு அஞ்சும் பரிதாபநிலை தோன்றியுள்ளது அத்தனகல்ல எம்.பி. லக்ஷ்மன் ஜயக்கொடி.

" இந்நாட்டில் இனங்கள் ஒன்றுக்கொன்று பயந்துவாழும் பரிதாப நிலை தோன்றியுள்ளது. பாதுகாப்புப்படையினர் ஒழுக்கமையைச் செய்ய அரசாங்க தலையீடு இருக்கக்கூடாது. பாதுகாப்பு படையினர் சுதந்திரமாக செயல்பட அரசியல்வாதிகள் அனுமதிப்பதில்லை. இலங்கையில் லட்சக்கணக்கான இந்திய வம்சாவழியினர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களின் விவகாரத்தில் இந்தியா தலையிடுவதை தடுக்கமுடியாது" என லக்ஷ்மன் ஜயக்கொடி கூறியுள்ளார். பாதுகாப்புப்படையினர் தான் இவ் வன்முறைக்கு தூபமிட்டவர்கள் என்பதை மறக்க முடியுமா?

## யாழ் கச்சேரி அருகில் சடலம்

யாழ். சண்டிலிப்பாயைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவலிங்கம் 12.07.83 அன்று கச்சேரி அருகில் இறந்து கிடக்கக்காணப் பட்டார். இவர் சம்பவதினம் நண்பர்களுடன் வீட்டில் இருந்து வெளியே சென்றபின் இறந்து கிடக்கக் காணப்பட் டார்.

## ஆயுதப்படை தயார்

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி கொண்டு செல்லப்பட்ட இரு வாலிபர்கள் கிளிநொச்சியில் ரயில் தரித்ததும் ஆயுதப்படையினருக்கு "டிமிக்கி" கொடுத்துவிட்டு ஓடி மறைந்துவிட்டதால் கோபமடைந்த ஆயுதப்படையினர் கிளிநொச்சியில் புரிந்த அட்டகாசத்தின் விளைவாக மூன்று கடைகளும் ஒரு மினிபஸ்ஸும் காரும் சேதமடைந்தன. கடைகளை நொருக்கிக் கொண்டிருக்கும் போது பஜாரில் மற்றைய கடைக்காரர்கள் கடையை மூடவே, ஒருவருடைய "ஷோக்கேஸை" அடித்து நொருக்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொப்பேகடுவ காலமானார்

முன்னாள் காணி, விவசாய அமைச்சரும், ஜனாதிபதித் தேர்தலில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளருமான ஹெக்டர் கொப்பேகடுவ தனது 67 வது வயதில் பட்டிருவரகிலுள்ள இவரது வீட்டில் 18.9.83 அன்று அதிகாலை ஏற்பட்ட மார்புவலியினால் மரணமானார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 37% வீத வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்திற்கு வந்த திரு. கொப்பேகடுவ 1960ம் ஆண்டுவரை சட்டத்தரணியாக இருந்துவிட்டு பாராளுமன்ற அரசியலில் இருந்தவராவர்.

## ஈழ விடுதலை முன்னணி செயலாளர் தேடப்படுகின்றார்

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்திற்கமைய அரசு ஊழியர்கள் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டாமென ஈழவிடுதலை முன்னணி விடுத்த சுவரொட்டி அறிவிப்பை தொடர்ந்து ஈழவிடுதலை முன்னணியின் செயலாளர் திரு. என். டேவிட்சீஸ பொலிசார் தேடுகின்றனர். நவாலியில் உள்ள இவரது வீட்டுக்குச் சென்ற பொலிசார் இவரது பெற்றோரை எச்சரித்துச் சென்றனர்.

## தேவனின் கொலையைக் கண்டித்து சுவரொட்டிகள்

தமிழீழ விடுதலை இராணுவத் தலைவர் திரு குலசேகரம் தேவசேகரம், புலி இயக்கத்தினால் கொல்லப்பட்டதை அடுத்து, கறுப்பு சிவப்பு நிறம் கொண்டதும் திரு குலசேகரம் தேவசேகரத்தின் படத்துடன் கூடியதுமான கண்டன சுவரொட்டிகள் யாழ்நகரெங்கிலும் ஒட்டப்பட்டுள்ளன.

## ஐ.நா.வுக்கு ஒன்றரைக்கோடி கையெழுத்து மகஜர்

இலங்கையில் தமிழர் பிரச்சனையில் ஐ.நா. தலையீட்டைக் கோரும் ஒன்றரைக் கோடி மக்கள் கையெழுத்திட்ட மகஜர் செப்டம்பர் 19ல் சென்னையில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டது. இம் மகஜர் தி.மு.கவினால் தயாரிக்கப்பட்டு தமிழ் நாட்டில் கையெழுத்து பெறப்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குட்டிமணியின் குடும்பத்திற்கு 2 லட்சரூபா பெறுமதியான வீடு

T.E.L.O இயக்க செயலதிபரான திரு. குட்டிமணியின் குடும்பத்திற்கு தமிழ் நாடு அரசாங்கம் ரூபா 2 லட்சம் பெறுமதியான வீடொன்றை ஒதுக்கிக் கொடுத்துள்ளது. இலங்கையில் இருந்து அகதிகளாக இந்தியா திரும்புவோருக்கெனிய அடிப்படையில் அரசி பங்கீடு செய்யப்படுவதோடு, குடிபெயரும் குடும்பம் ஒன்றுக்கு ரூபா 5000 வரை கடனும் பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## கொலையுண்ட சடலங்கள்

நாட்டின் நாலாபக்கங்களிலும் சுடப்பட்டு இறந்த, அல்லது குத்திக் கொலை செய்யப்பட்ட சடலங்கள் காணப்படுகின்றன. வசிமிறவ, வெல்லவெளி மற்றும் கிழக்கு மகாணத்திலும் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டு அடையாளம் காணப்படாத நிலையில் இருக்கின்றன. மேலும் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு இன்னமும் 750 பேர் வரையில் காணப்படவில்லை என அறிவித்தலொன்று இலங்கைக்கிளையில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர் ஜனநாயக விடுதலை முன்னணி

புதிதாக தோன்றியுள்ள தமிழர் ஜனநாயக விடுதலை முன்னணி, தவறணைகள் மூலம் அரசுக்கு அதிகமான பணம் போகின்றதென காரணம் காட்டி செப்டெம்பர் 15 உடன் நாட்டின் சகல தவறணைகளையும் மூடிவிடும்படி உத்தரவிட்டுள்ளது. சிலர் தமிழர் ஜனநாயக விடுதலை முன்னணியின் துண்டுப்பிரசுரத்தைக் காண்பித்து கரவெட்டியில் சில தவறணைகளை மூடிவிடும்படி மிரட்டினர்.

## விசாரணை நடத்துமாறு 42 தொழிற்சங்கங்கள் கோரிக்கை

சமீபத்திய இனக்கலவரம் தொடர்பாக சுதந்திர விசாரணை நடத்துமாறும், சகல அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறும் 42 தொழிற்சங்கங்கள் சேர்ந்து ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெமட்டக்கொட பகுதியில் மட்டும் 200 கொள்ளை, தீவைப்பு சம்பவங்கள்.

கடந்த ஜூலை மாத இனக்கலவரத்தின் போது தெமட்டக்கொட பொலிஸ் பகுதியில் மட்டும் சுமார் 200 கொள்ளை, தீவைப்பு சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக தெமட்டக்கொட பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். இக் கொள்ளை, தீவைப்பு சம்பவங்களின் பின்னணியினர் எனக் கருதப்படும் சிலரையும் தெமட்டக்கொட பொலிசார் கைது செய்துள்ளனர். இது இப்படியிருக்க பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் மட்டும் 287 புகார்கள், தங்கள் சொத்து, உடமைகள் வீடுகள் இழந்தோரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் இராணுவ ரோந்து

யாழ்ப்பாணத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட கெடுபிடி நடவடிக்கையை அடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராணுவ ரோந்து மீண்டும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. டிரக், ஜீப் வாகனங்களிலும் கவச மோட்டார்களிலும் உலாவும் இவர்கள் பிரதான சந்திப்புகளிலும், நகர்ப்புறத்திலும் தரித்து நின்று பாதசாரிகளை தொல்லைக்குள்ளாக்குகின்றனர்.

## பயணக் கைதி சில்வா

தெற்கு பிலிப்பைன்ஸில் "தனிநாடு" கோரும் முஸ்லிம் கொரில்லாக்கள் பணயப் பணத்திற்காக இலங்கை தொழில் நுட்பவியலாளரான திரு. அஜித்பிரியதர்சி டி. சில்வாவையும் அவருடன் கூட இருந்த உதவியாளரான பிலிப்பினோ பெண்ணும் கடத்தப்பட்டு மணிலாவிலிருந்து 500 மைல் தூரத்திலுள்ள கொட்டபாடோ மாகாணத்தின் வடமேற்கு எல்லையில் வைக்கப்பட்டுள்ளனர். பணயப்பணமாக 45,000 டாலர் தொகையை அவர்கள் தந்தபோது 90,000 ஆயிரம் டாலராக உயர்த்தி உள்ளனர். இருவரையும் விடுவிப்பது தொடர்பாக முஸ்லிம் கொரில்லாத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாயும் விரைவில் விடுவிக்கப்படலாமெனவும் தெரியவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவினைப் பயங்கரவாதத்தை நசுக்கவேண்டும்

நாட்டுப் பிரிவினைக்கான பயங்கரவாதத்தை நசுக்கவேண்டும் என பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸ் தம்மைச் சந்தித்த இலங்கையின் விசேட தூதுவர் எச். டபிள்யு. ஜயவர்த்தனவிடம் கூறினார். தெற்கு பிலிப்பைன்ஸ் மின்டானோ தனிநாடு கோருவதை போன்ற ஒன்றுதான் இலங்கையில் என்று குறிப்பிட்டவர், வளர்முக நாடுகளில் பிரிவினை கோருவது வழக்கமாகிவிட்டது என்றும் குறிப்பிட்டார். திரு. மார்க்கோஸும், ஜயவர்த்தனவும் பிரிவினை கோருவோரிடம் வாங்கிக் கட்டப்போவதை மறந்துவிட்டா? பேசுகின்றனர்.

## இந்தியத் தூதுவருக்கு மகஜர்

"அண்மையில் நாட்டில் இடம்பெற்ற இனக்கலவரத்தால் பயங்கரமான பாதிப்புக்குள்ளான எங்களை மீண்டும் தோட்டங்களில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறபோதிலும், நாங்கள் இலங்கையில் இருக்கும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டோம். எம்மை கூடிய விரைவில் இந்தியாவிற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுங்கள். இந்நாட்டின் மீதுள்ள நம்பிக்கையை முற்றாகவே நாம் இழந்த நிலையில் இருக்கின்றோம். முகாமிலிருக்கும் எமக்கு எத்தகைய கவனிப்போ, உதவிகளோ செய்யப்படுவதில்லை. உணவுப் பற்றாக்குறை பெருமளவு தாண்டவமாடுகின்றது. உடைகள் எதுவுமே இன்னமும் வழங்கப்படவில்லை. கைக்குழந்தைகளுக்கான பால்மாவும் விநியோகிக்கப்படவில்லை. அதிகாரிகள் எமது நிலையை கண்டும் காணாததுமான நிலையில் உள்ளனர். அத்தோடு சுகாதார வசதிக் குறைவால், கண்நோய், வயிற்றோட்டம் போன்ற நோய்களைச் ஒரு சிலருக்குக் கண்டுள்ளது. முகாமிலிருக்கும் எம்மை இந்தியாவுக்கு அனுப்பும்வரை உணவு, உடை, மற்றும் மருத்துவ வசதி போன்றனபெற்றுத்தாருங்கள்" என அகதிகள் இந்தியத் தூதரை கேட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்டாக வேண்டும் :- "இந்தியன் எக்ஸ்பிரஸ்".

"இலங்கையில் நடைபெறும் சம்பவங்களால், குறிப்பாக தமிழ் சிறுபான்மையினர் சம்பந்தப்பட்டவைகளால் இந்தியா பாதிக்கப்படாதிருக்க முடியாது எனவும் இலங்கைத் தமிழ் தலைவர்களுடன் ஒரு தீர்வை விரைவிலோ அல்லது பின்னரோ கண்டாகவேண்டும் தமிழர்களுடன் தீர்வு காண்பது கட்டாயமானதாகும்" எனவும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை செப்டம்பர் 21ம் திகதிய பதிப்பில் கூறியுள்ளது.

## சர்வதேச விசாரணைக் கமிஷன்

"அண்மைக்கால வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை நடைபெறவேண்டும். இதற்கான சர்வதேச விசாரணைக்கமிஷன் நியமிக்கப்படவேண்டுமெனவும் ஐக்கிய தோட்ட தொழிலாளர் சங்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திர தோட்ட தொழிலாளர் சங்கம், இலங்கைப் பொதுச் சேவையாளர் சங்கம், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் செங்கொடிச்சங்கம், தொழிலாளர் தேசிய சங்கம், இலங்கைத் தோட்டத்தொழிலாளர் சங்கம், புதிய செங்கொடி தோட்டத் தொழிலாளர் சங்கம், ஸ்ரீ லங்கா தேச விமுக்தி தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகிய பதினொரு தொழிற் சங்கங்கள் கூட்டாக கோரிக்கை விட்டுள்ளன.

இதர தீர்மானங்களில் சில:-

அ/ கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு, வீடுகள், கடைகள் இந்து, கிறிஸ்தவ கோயில்களை நாசப்படுத்தல் போன்ற சம்பவங்கள் தலைதூக்கியிருந்த போது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்கான கண்டனம்.

ஆ/ வாழ்க்கைப்பளுவை திசை திருப்புவதற்காக திருப்பப் பட்ட வன்செயல் இது.

இ/ பாதிப்புற்றோருக்கு உடன் நஷ்டஈடு வழங்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுச் செய்திகள்

## அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தானிய இராணுவ ஆட்சி எதிராக நடைபெற்ற சிந்துமாகாண ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் அமெரிக்க கொடியை எரித்து, அமெரிக்க எதிர்ப்பையும் அமெரிக்க அரசாங்கம் பாகிஸ்தானிய சர்வாதிகாரி ஜியா உல்கக்கிற்கு இராணுவ உதவி கொடுப்பதை நிறுத்தும்படியும் கோரினர்.

சிந்துமாகண வடக்குப்பகுதியான கைப்பூர் (KHAIPUR) மாவட்டத்திலும், மத்திய மாவட்டமான சாக்ரண்ட் (SAKRAND) இலும், தொடர்ச்சியாக நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் தொண்டர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், மாவட்டசபை உறுப்பினர்களும் கைதுசெய்யப்பட்டனர். பதினைந்துக்கும் மேற்பட்ட சிந்துமாகாண நகரங்களில் நடைபெற்ற இந்த அமைதியான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பொலிசார் கண்ணீர்ப்புகைக்குண்டுகளையும், தடியடிப் பிரயோகமும் செய்தனர்.

சர்வாதிகாரி ஜியா உல்கக் ஆயிரம் கைதிகளை விடுவித்தும், நிலப்பிரபுக்களின் சொத்துக்களை பார்வையிடுவதாகவும், இராணுவ ஆட்சிக்கெதிராக பொங்கியெழும் மக்களை அமைதிக்குக் கொண்டுவரும் தந்திரோபாயத்தைச் செய்தார். இருந்தும் ஜியா-உல் கக்கிற்கு எதிரான வெகுஜனக்கிளர்ச்சி வர வர வளர்ந்து கொண்டே போகின்றது.

## லெபனான் குண்டு வீச்சு

லெபனானில் நடைபெற்றுவரும் போரில், குண்டு வீச்சுக்கு இலங்கைப் பெண்மணி திருமதி புஷ்பராணி(?) வீரசூரிய சென்ற ஆகஸ்ட் 31ல் காலமானார் என லெபனிய அரசாங்கம் இலங்கை வெளிநாட்டமைச்சுக்கு அறிவித்துள்ளது. லெபனானில் அமெரிக்க கைப்பொம்மையான அப்துல் கமாயலுக்கு எதிராக லெபனிய விடுதலை இயக்கம் போராடிவருவது தெரிந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளித்துவம் ஏன் நெருக்குவாரத்தில்

பூகோள ரீதியாக நிதிமூலதனத்துக்கு எதிரான போராட்டம் உக்கிரமடைந்து கொண்டு வருகின்றது. சுரண்டுகின்ற இந்த மூல-தனத்திற்கெதிரான போராட்டமானது பல்வேறு வடிவங்களைத் தாங்கி பிரேசிலில் தாங்க முடியாக் கடன் தொல்லையாகவும், இஸ்ரேலில் பெரியது ராணுவமாகவும், லெபனானில் உள்நாட்டு யுத்தமாகவும், மேற்கு ஐரோப்பாவில் தொழிற்சங்க போராட்டமாகவும், பாக்கிஸ்தானில் ஜியா-உல் ஹக்கு எதிரான போராட்டமாகவும், இலங்-கையில் தமிழீழப்போராட்டமாகவும் உருவெடுத்துள்ளது. இப்பேற்பட்ட போராட்டத்தின் வடிவங்களும், இடங்களும், நேரங்களும், நபர்களின் எண்ணிக்கைகளும் மாறுபடினும் இவை அனைத்தும் ஒடுக்குவோருக்கும், ஒடுக்கப்படுவோருக்குமான போராட்டமே. அதாவது முதலாளி வர்க்கத்திற்-கும், பாட்டாளி வர்க்கத்திற்குமான போராட்டமே. இப்போராட்டமானது இன்று மிகத்துல்லியமாகவும், துரிதகதியிலும், அதிக அழிவிலும் நடை-பெறுவதையே கடந்த ஒருசில வாரங்கள் விளக்கிக் காட்டிச் சென்றுள்-ளன.

தோல்விக்குப்பின் தொய்வியாக உலக ஏகாதிபத்தியமானது வட-கொரியாவை, சீனாவை, வியட்நாமை, ஆபிரிக்காவை, மத்தியகிழக்கை ஈ.ரானை ஆட்டிப் படைக்கும் வல்லமையிலிருந்து பெருமளவு தடுத்து நிறுத்தப்பட்டது. 1968 மே-யூன் மாதங்களில் பிரான்சில் ஏற்பட்ட எழுச்சியும், தற்போது மேற்கு ஐரோப்பாவில் அணு-ஆயுத எதிர்ப்பு எழுச்சியும் ஏகாதிபத்தியத்தின் வல்லமைக்கு விடப்பட்ட சவால்களே.

லெபனானில் ஏகாதிபத்தியத்தின் பாதுகாவலராக செயல்பட்டு வரும் AMIN GAMAYEL இனது ராணுவத்துடனும், சர்வதேச சமாதானப்படை என்று சொல்லப்படும் ஏகாதிபத்திய அமெரிக்க, பிரித்தானிய, பிரெஞ்சுத் துருப்புக்களுடன் மிகப்பெரிய போரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WALID JUMBLATT இன் தலைமையிலான முற்போக்கு சோஷலிசக் கட்சியும், NABIH BERRI யின் தலைமையிலான SHIITE முஸ்லிம் கட்சியும், AMAL விடுதலை இயக்கமும் ஈடுபட்டுள்ளன. இக்கட்சிகள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட AMIN GAMAYAL இன் அரசை மக்கள் ஏற்கவில்லையெனவும், கடந்த செப்டம்பரில் லெபனானினுள் நுழைந்த இஸ்ரேலிய துருப்புகள் லெபனானை விட்டு முற்றாக வெளியேற வேண்டுமெனவும், மக்களது இறைமையை அங்கீகரிக்கும் படியும், பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும்படியும் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்றுவரை சர்வதேச சமாதானப்படையொன்று உலக மக்களுக்கு பூச்சாண்டி காட்டிய அமெரிக்க கடற்படையினர் லெபனான் இராணுவத்தின் இயலாமையைக் கண்டு தாமே போருக்கு நேரில் இறங்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதை தொடர்ந்த இவ்விடுதலை இயக்கங்களின் கடும் தாக்குதல்களுக்கு, பல அமெரிக்க, பிரெஞ்சுத் துருப்புக்கள் இரையானார்கள். இதைத் தொடர்ந்து மேலும் 2,000 துருப்புக்களை லெபனானிற்கு உடனடியாக றேகன் நிர்வாகம் அனுப்பியுள்ளதுடன் மத்திய தரைக்கடலில் அணுவாயுத தாங்கிக் கப்பலான "EISEN HOWER" ஐ ஏற்கனவேயுள்ள யுத்தக்கப்பலான "IWO JIMA"வுக்கு பலம் சேர்ப்பதற்கு அனுப்பியுள்ளது.

இதே நேரத்தில் WALID JUMBLATT இன் தலைமையிலான இடதுசாரிப்போராளிகள் லெபனானின் முக்கிய மலைசார்ந்த நகரமான BHAMDOUN ஐக் கைப்பற்றியுள்ளதாக அவர்களது புரட்சிகர வானொலி நிலையமான 'MURABITOUN RADIO' அறிவித்துள்ளது. ஆனால் வலதுசாரி வானொலி இதனை ஒரு யுத்தி மிக்க பின்வாங்கல் எனக் கூறியுள்ளது. ஏற்கனவே இவ் இடதுசாரிப் போராளிகள் பெய்ரூட் - டமாஸ்கஸ் பெருஞ்சாலை, சூவ் (SHOUF MOUNTAINS) மலைப் பகுதிகளையும் கைப்பற்றியுள்ளனர். ஜெனீவாவில் ஐக்கியநாடுகளின் பலஸ்தீன உரிமைகள் குழுவில் உரையாற்றுகையில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொள்கைகளினாலேயே தற்போதய லெபனான் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினர்.

லெபனானில் முற்போக்குச் சக்திகளின் வெற்றியானது ஏகாதிபத்திய அடிவருடியான இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் MOSCHE ARENS ஐ கடும் சினத்திற்கு ஆளாக்கியுள்ளது. சிரியாவினது துருப்புக்களும், பாலஸ்தீன விடுதலை இயக்க வீரர்களும் லெபனான் இடதுசாரிகளுக்கு உதவி அளிப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். இதற்கிடையில் லெபனான் நிதி அமைச்சர் ADEL HAMMIYEH இன் ராஜினாமா லெபனானில் புதிய நெருக்கடியினைத் தோற்றுவித்துள்ளன.

இதே வேளையில் இஸ்ரேலில் பெகினது ராஜினாமாவானது ஒரு நிலையற்ற அமைச்சரவையை SHAMIR இன் தலைமையின் கீழ் ஏற்படுத்த முனைகிறது. 21 பில்லியன் டொலர் வெளிநாட்டுக்கடனும், 24 பில்லியன் உள்நாட்டுக்கடனுமுள்ள நாடான இஸ்ரேல் தற்பொழுது தமது யுத்த தளபாட ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக மேலும் பெரிய பொருளாதார சிக்கலில் ஈடுபட்டுள்ளது. தொடர்ந்து ஏறிச் செல்லும் விலைவாசியானது 125% க்கும் அதிகமாக கணக்கிடப்பட்டுள்ளது. 1981-ஆம் ஆண்டு மட்டும் $ 1,250 மில்லியன் ஐ இஸ்ரேல் ஆயுத ஏற்றுமதியினால் பெற்றுக்கொண்ட நாடாகும். மேலும் தொழிலாளர்களில் 1/3 பங்கினர் ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். ஆயுதங்கள் தென் ஆபிரிக்கா, ஆர்ஜென்டீனா, பொலிவியா, கொலம்பியா, ஈக்குவடோர், எல்சல்வடோர், கௌதமாலா, ஹொண்டுராஸ், இந்தோனேசியா, பேரு, சிங்கப்பூர், தாய்வான், தாய்லாந்து, வெனிசுலா, ஸேர போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் ஆர்ஜென்டீனா முதற்கொண்டு அனைத்து லத்தீன் அமெரிக்க நாடுகளும் கடனில் மூழ்கியுள்ளன. இந்த நெருக்கடியில் மேற்கொண்டு ஆயுதங்களை முந்திய அளவுகளில் வாங்கமுடியாமல் போகவே இஸ்ரேலின் பொருளாதாரம் ஆட்டம் காணத் தொடங்கியது. இஸ்ரேல் நிதிமந்திரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YORAM ARIDOR இதன் பொருட்டே சமூகச் செலவினங்களில் $ 1 பில்லியன் ஐ வெட்ட வேண்டும் என்ற பிரேரணையை முன் வைத்தார். பிள்ளை பேற்றுச் சேவை முற்றாக நீக்கியும், பிள்ளைகளுக்கு வழங்கும் அலவன்சிற்கு 10% வரிவிதித்தும், கல்விச் செலவினங்களில் $ 50 மில்லியன்களை வெட்டியும் மற்றும் போக்குவரத்து உட்பட அனைத்திலும் விலையுயர்வை ஏற்படுத்துவதனால் மட்டுமே இஸ்ரேலைக் காப்பாற்ற முடியும் என்று YORAM ARIDOR கடந்த மாதம் மந்திரி சபையில் தெரிவித்தார். இவ்வாறு சமூகச் செலவின வெட்டுக்களுக்கு மத்தியிலே தான் தென் லெபனானை ஆக்கிரமித்துள்ள ஒவ்வொரு நாளும் ஒரு மில்லியன் டொலர் வீதம் செலவு செய்கின்றனர். இதனை ஆட்சேபித்து 40,000 இஸ்ரேலியர்கள் வரிகொடாதிருந்து வருகின்றனர். இஸ்ரேலின் வேலையில்லாத் திண்டாட்டம் 10% அடைந்துள்ள இந்த நிலையிலேயே பெகின் ராஜினாமாச் செய்தார்.

பூகோளத்தின் மறுகோடியில் பிரேசில், மெக்சிக்கோ, ஆர்ஜன்டீனா, வெனிசுலா, சிலி நாடுகளில் கடன் தொல்லை ஏகாதிபத்தியத்திற்கு பெரும் தலையிடியை உண்டாக்கிய வண்ணமேயுள்ளது. மத்திய தர, சிறிய வங்கிகளை நசுக்குவதற்காகவும், உலகின் மூலதனத்தின் பெரும்பகுதியை தமது பிடிக்குள் கொண்டு வருவதற்காகவும் றேகன் நிர்வாகம் 6% இலிருந்த டொலரின் வட்டி வீதத்தை 20% இற்கு உயர்த்தியதன் விளைவாக இந்நாடுகள் பெரும் நெருக்கடியினுள் தள்ளப்பட்டன. பிரேசில் மட்டும் ஒவ்வொரு வீதத்தால் வட்டி ஏறிச் சென்ற போது 600 மில்லியன்களை மேலதிகமாக சர்வதேச நாணய சபைக்கும், சர்வதேச வங்கிகளுக்கும் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. இதன் தாற்பரியமே ஒன்பது மாதங்களுக்கு முன்னால் 80 பில்லியன் டொலரை கடனாகக் கொண்டிருந்த பிரேசிலின் கடன் தொகை இன்று ஏறிச் செல்லும் டொலரின் வட்டி வீதத்தினால் 100 பில்லியன் டொலராகும். சர்வதேச நாணய சபை (IMF) மேற்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னால் ஒரு டொலர் கூட கடன் தரமுடியாதெனக் கூறியதோடு பிரேசில் தொழிலாளரின் சம்பளத்தை 20%ஆல் வெட்டும்படியும், சமூக செலவினங்களை வெட்டும்படியும் நெருக்கிப்பிடித்தது. IMF இனது போக்கினை ஆட்சேபித்து பிரேசிலின் மத்திய வங்கி கவர்னரான CARLOS LANGON ராஜினாமா செய்ததை தொடர்ந்து லத்தீன் அமெரிக்க கடன் நெருக்கடி புதிய திசையில் திரும்பியுள்ளது. இதே நேரத்தில் சம்பளவெட்டினை அமுல் படுத்தினால் தமது போராட்டத்தை ஆரம்பிப்போம் என தொழிற்சங்கங்கள் கூட்டறிக்கையில் எச்சரித்துள்ளன. இதே வேளையில் சிலியில், SANTIAGOவின் கவர்னரான GENERAL URZUA ஆயுதம் தரித்த இளைஞர் கோஷ்டியால் சுட்டுக்கொல்லப்-பட்டார். சிலி இராணுவ ஆட்சிக்கெதிரான நடவடிக்கைகள் மேலும் உக்கிரமடைவரும் நிலையில், செப்புத்தொழிலாளர் சங்கமும், வாகனப்போக்குவரத்தாளர் சங்கமும் தமது நடவடிக்கைகளை உக்கிரப்படுத்தி வரும் வேளையிலேயே சர்வாதிகாரி PINOCHETஇன் நண்பரான GENERAL URZUA கொல்லப்பட்டார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவலியானது நிக்கரகுவாப் புரட்சியினால் அளவு கடந்த சோதனைக்குள்ளாகியதன் காரணமாகவே இன்று தனது முழுச்சக்தியையும் பாவித்து றேகன் நிர்வாகம் எல்சல்வடோர் அரசினைக் காப்பாற்ற அதீத பிரயத்தனம் எடுத்து வருகின்றது. இதற்கு மத்தியில் UNGO தலைமையில் இயங்கும் FMNL விடுதலை இயக்கம் SAN MIGUEL என்ற இடத்தில் வைத்து 300 அரச துருப்புக்களைக் கொன்றனர் அல்லது காயப்படுத்தினர் என கெரில்-லா வானொலியான 'ரேடியோ VENCEREMOS' அறிவித்தது. அமெரி-க்காவின் பாதுகாப்பு செயலாளர் WEINBURGERஇன் மத்திய அமெரிக்க விஜயத்திற்கு ஆட்சேபம் தெரிவித்தே இந்த தாக்குதல் நடைபெற்றதென கெரில்லாக்கள் தெரிவித்தனர். இதே நேரத்தில் WEINBURGER அமெ-ரிக்காவானது மேலும் இராணுவ உதவிகளை எல்சல்வடோருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கவேண்டுமென அமெரிக்க காங்கிரஸைக் கேட்டுள்ளார். அமெரிக்க ஏகாதிபத்தியம் நிக்கரகுவா புரட்சியை தோற்கடிப்பதற்காக HONDURAS இலே 5,600 அமெரிக்க இராணுவ வீரர்களும் மற்றும் COMMANDER ZERO தலைமையிலான நிக்கரகுவா எதிர்ப்புரட்சி படைகளுடனும் , HONDURAS இராணுவத்தினுடனும் சேர்ந்து போர்ப்பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு மத்தியிலும் கூட கியூபா, நிக்கரகுவா நாடுகளூடாக ஆயுதங்கள் தொடர்ந்து எல்சல்வடோர் FMNL போராளிகளுக்கு கிடைத்த வண்ணம் இருக்கின்றன.

பூகோளத்தின் மறுகோடியில் அங்கோலாவில் புரட்சித் தலைவர் DOS SANTOS நிறவாத, ஏகாதிபத்திய அடிவருடியான தென் ஆபிரிக்க அரசின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை சாடியுள்ளார். கிராமிய தற்பாதுகாப்பு அணிகளை உருவாக்கிய கூட்டத்தில் பேசிய அவர் MPLAயினால் கொண்டுவரப்பட்ட புரட்சியை CIA சார்பு UNITA படைகள் தோற்கடிக்க முற்படுவதாகவும், கடந்தமாதம் CANGAMBA என்ற பட்டினத்தை தென் ஆபிரிக்காவின் படைகளுடன் UNITA படைகள் கூட்டுச் சேர்ந்து தகர்த்தெறிந்ததையும் அவர் குற்றம் சாட்டினார். இதே வேளையில் தன்சானியாவின் ஜனாதிபதி JULIUS NYERERE ஆபிரிக்க பொதுநல அமைப்பு நாடுகளின் கூட்டத்தில் பேசும்போது அதில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளையும் தென் ஆபிரிக்க அரசை தோற்கடிக்க முன்வருமாறு அறைகூவல் விடுத்தார்.

NIGERIA வின் பெற்றோலிய ஏற்றுமதியால் கிட்டும் வருமானம் குறைந்து சென்றதன் காரணமாகவும் ஏகாதிபத்திய விரோத கானு அரசுக்கு தலையிடி கொடுக்கவும், சென்ற மாசி மாதத்தில் 2 மில்லியன் கானாநாட்டு மக்களை காட்டுமிராண்டித்தனமாக வெளியேற்றிய NIGERIA அரசு, தற்போது மீண்டும் மிகப்பெரிய பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கலில் இருந்துள்ளது. பொதுத்தேர்தலில் நைஜீரியாவின் ஜனாதி-
பதி SHAGARI ஐ தாங்கிப்பிடிக்க ஓடிவந்த சர்வதேச நாணயசபை
$2.6 பில்லியனை மேலதிக கடனாக வழங்கியுள்ளது. சர்வாதிகாரப்
போக்கினைக்கொண்ட ஜனாதிபதி SHAGARI யின் பணிப்பின் பேரில்
ஆகஸ்ட் தேர்தலில் எதிர்ப்பு ஊர்வலம் நடத்திய குற்றத்தின்
பேரில் 80 பேர் அவசரகாலச் சட்டத்தின்கீழ் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
ஆகஸ்ட் தேர்தலில் எதிர்க்கட்சியினர் வாக்களிப்புச் செய்ய முடியாத-
படி தடுக்கப்பட்டும், அரச தரப்பில் 18 வயதுக்குக் குறைந்தவர்களின்
கள்ள வாக்குகள் பதியப்பட்டும் பெரும் ஊழல்கள் நடைபெற்றன.
மத்திய BENUE மாகாணத்தில் தேர்தல் அதிகாரிகள் சம்பள உயர்வு
கோரி வேலைநிறுத்தம் செய்ததால் தேர்தல்கள் இம்மாகாணத்தில்
நடக்கவில்லை. இந்நிலையில் மூழ்கித்தவிக்கும் நைஜீரிய அரசைக்
காப்பாற்றவேண்டி சர்வதேச நாணயசபை லாகோஸ் நகருக்கு
விரைந்து சென்றது.

துருக்கியில் 1980-ல் இராணுவச் சதியினால் ஆட்சியைக்
கைப்பற்றிய KENEN EVREN இன் தலைமையிலான அமெரிக்க
ஏகாதிபத்தியத்தினால் உருவாக்கப்பட்ட ஆட்சியானது ஜனநாயகத்-
துக்கு ஆப்பு வைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது. இந்த ஆண்டு
இறுதியில் NOVEMBER 6ந் திகதி நடக்கவுள்ள தேர்தலில் 15 கட்சி-
களைத் தடைசெய்ததுடன் 400 வேட்பாளர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுள்-
ளனர். அதீத வலதுசாரிக் கட்சியான NATIONALIST DEMOCRACY
PARTY, MOTHERLAND PARTY, POPULIST PARTY ஆகிய மூன்று
கட்சிகள் மட்டுமே தேர்தலில் பங்கு கொள்ள விடப்பட்டுள்ளன.
இடதுசாரிக்கட்சிகளில் ஒன்றான REPUBLICAN PEOPLES PARTY
தடை செய்யப்பட்ட கட்சிகளில் ஒன்றாகும். ஜனாதிபதி KENAN
EVREN , RPP கட்சியை ஒருபோதும் தாம் அங்கீகரிக்கப்போவதில்லை
எனக் கூறியுள்ளதுடன் முன்னாள் பிரதம மந்திரிகளான BULENT



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ECEVIT, SULEYMAN DEMIREL ஆகியோரை சிறையும் செய்துள்ளார். ஏற்கனவே 21,000 அரசியல் கைதிகளை சிறைப்பிடித்திருக்கும் இராணுவ ஆட்சியின் பாதுகாவலர்களான முதலாளித்துவவாதிகளும், முதலாளித்துவப் பத்திரிகைகளும் துருக்கியில் 2500 அரசியற் கைதிகளின் உண்ணாவிரதப்போராட்டத்தை இருட்டடிப்புச் செய்தனர். இதைத் தொடர்ந்து இங்கிலாந்தில் ஆகஸ்ட் 30 இல் தொழிற்கட்சியுடன் இணைந்த உண்ணாவிரதப் போராட்டத்தை துருக்கி ஜனநாயக பாதுகாப்பு கமிட்டி நடாத்தியது. தொழிலாளர்களை அணிவகுத்து ஊர்வலம் நடத்திய குற்றத்தின் பேரில் 78 DISK தொழிற்சங்கத் தலைவர்களை துருக்கி அரசு சிறைப்பிடித்துள்ளது.

ஈரானுக்கு ஷாவைப்போல பிலிப்பைன்சில் மார்க்கோஸ் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு விமான, கடல் படை தளங்கள் வைத்திருப்பதற்கான அனுமதி கொடுத்ததின்




மூலம் பிலிப்பைன்ஸ் மக்களை ஒடுக்கும் கரங்களை மேலும் வலுப்படுத்தியுள்ளார். பிலிப்பைன்சில் தற்போது நடக்கும் போராட்டங்கள் "மார்க்கோஸ்/றேகன்" கூட்டுச் சதிக்கு ஆப்பு வைக்கும் வழியில் வளர்ந்து செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிப்பைன்ஸில் ஜனாதிபதி MARCOS இன் சர்வாதிகார ஆட்சியானது, எதிர்க்கட்சித் தலைவரான "அக்கியூனோவை" கொன்று முடித்ததன் மூலம் ஜனநாயகத்தின் ஆணிவேரிலிருந்து நச்சு முலாம் பூசியுள்ளது. தூரகிழக்கு நாடுகளில் மூன்றாவது பெரிய கடனாளி நாடான பிலிப்பைன்ஸின் வெளிநாட்டுக்கடன் 18 பில்லியன் டொலர்களாகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடியான MARCOS அரசுக்கெதிரான போராட்டமானது அக்கியூனோவின் கொலையினால் புதிய காலக்கட்டத்தினுள் புகுந்துள்ளது.

கடந்த வருடத்தின் பட்ஜெட்டின் துண்டுவிழுந்த தொகை மட்டும் $ 1.1 பில்லியன் டொலராகும். இதற்கு மத்தியிலேயே வருகின்ற பொதுத்தேர்தலில் MARCOS ஐ காப்பாற்றவும், அவருக்கு விளம்பரம் சேர்க்கவும் அமெரிக்க ஜனாதிபதி றேகன் தமது நவம்பர் மாத பிலிப்பைன்ஸ் விஜயத்தை மீண்டும் ஊர்ஜிதம் செய்துள்ளார். கடந்த 10 வருடங்களில் முதல்தடவையாக சியோனிஸ்ட் நாடான இஸ்ரேலுக்கு விஜயம் செய்த கறுப்பு ஆபிரிக்க நாட்டுத் தலைவரான லைபீரிய ஜனாதிபதி SAMUEL DOE இஸ்ரேல் பிரதமர் பெரிஸுடன் இராணுவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும், இராணுவ தளபாடங்கள், விவசாயப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும் ஒப்பந்தம் செய்து கொண்டார். CIA சார்பு ஜனாதிபதி SAMUEL DOE யின் இந்தப் போக்கானது ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமையை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக முற்போக்குச் சக்திகள் குறிப்பிட்டுள்ளன.

இவ்வாறாக முதலாளித்துவமானது தனது அந்திமகால நெருக்கடியில், பூகோளத்தின் அனைத்துத் திக்கிலும், தனது லாப வெறிக்காக லட்சோப லட்சம் மக்களின் உணர்ச்சிகளை அரச இயந்திரம் ஈடஜும் இழியிருப்புகளை புதைத்து அவர்கள் வாழ்வினை சூனியமாக்கி வரும் வேளையிலே சகாப்தம் சகாப்தமாக ஒடுக்கப்பட்ட மக்கள் உண்மைகளைப் புரிந்துகொள்ள ஆரம்பித்ததன் காரணமாகவும் முதலாளித்துவமானது ஏகாதிபத்தியமாக எல்லை கடந்து வளர்ந்து ஒரு நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி மூலதனமானது, மறுநாட்டின் நிதிமூலதனத்தை ஆக்கிரமிக்க முனைந்-ததானது ஏற்படுத்திய ஏகாதிபத்தியப் போர்கள் தற்காலிகமாக நிறுத்-தப்பட்டு மூலதனத்தின் ஏற்றுமதியின் மூலம் நவ காலனித்துவங்கள் மேற்கொள்ளப்பட்டதும் சுதந்திர வர்த்தகம் பேசிப் புறப்பட்ட ஏகாதி-பத்திய வாதிகள் தமது நிதிமூலதனத்தை பராமரிக்க இறக்குமதிக் தடை என்ற பாதுகாப்பு வாதத்தில் தாவியதும் இரண்டாவது உலகப்போ-ருடன் ஏகாதிபத்தியப் போர் முடிந்து விடவில்லை என்பதையும் அது இன்று ஒழிவு மறைவில்லாத நிர்வாணமான சர்வ வியாபகம் பெற்றுள்-ளது என்பதும் இதற்கு மத்தியிலேயே காலம் காலமாக முதலாளித்துவ பாரிய தொடர்புச் சாதனங்களாலும், முதலாளித்துவ கல்வி அமைப்பு முறையாலும், ஆத்மீக அடிமைகளாய் தேசியவழி, சாதிவழி, நிறவழி, மதவழி ஊட்டி வைக்கப்பட்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்கள் இன்று தாம் இழப்பதற்கு உயிர் மட்டுமே மிச்சமுள்ள இந்நிலையிலே சோஷலிசத்தின் அவசியத்தை உணர்-ந்து கொண்டதன் காரணமாக தமது விடுதலையை நோக்கி நடை போடும் இச் சந்தர்ப்பத்திலே தான் முதலாளித்துவமானது சரித்திர திசை-களை பின்னோக்கிச் சுழற்ற அவாவிழந்து நிற்கின்றது.

இரண்டாவது உலகப்போரின் முடிவின் போது 1944ஆம் ஆண்டு யூலை மாதம் 1ம் திகதி பிரிட்டின் வூட் (BRETTON WOOD)யிலே அமெரிக்க நிதி மந்திரி கையெழுத்திட்டு 35 டொலருக்கு ஒரு அவுன்ஸ் தங்கம் கொடுப்-பதாக வாக்குறுதியளித்ததானது அந்நாளில் ஸ்டேர்லின் பவுண் ஏற்படுத்-திய அராஜக நிலையையும் பார்க்க உலக வியாபாரத்தில் சிறிது காலத்துக்கு ஸ்திரமற்ற நிலையை தோற்றுவித்தது. அதனால் அமெரிக்க மத்திய வங்கியா-னது 40 மில்லியன் டொலர்களை காசாக அச்சடித்து வெளியிட்டது. 1968இல் பிரான்சின் ஜனாதிபதி டிகோலினால் அம்பலத்தப்படவே சர்வதேச வியாபாரத்தின் தான்தோன்றித்தனமான திசைகள் ஒன்றன்பின் ஒன்றாக அதுவது பாதையிலிருந்து விலகித்திக்கவும் வெளிக்கொண்டு புறப்பட்டன. 1971ம் ஆண்டு ஆகஸ்ட் 15ல் ஜனாதிபதி நிக்சன் டொலருக்கும், தங்கத்துக்கு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான சம்பந்தத்தை உடைத்ததன் மூலம் அமெரிக்காவிற்கு வெளியில் உலாவும் டொலர்களை கட்டுப்படுத்த உரிய நிறுவனம் இல்லாமல் போனது. இன்று அமெரிக்காவில் புழக்கத்திலுள்ள ஒவ்வொரு டொலருக்கும் எந்த நிறுவனத்தாலும் கட்டுப்படுத்த முடியாதவாறு மூன்று டொலர்களேனும் வெளிநாடுகளில் புழக்கத்தில் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தனது நிதிமூலதனத்தை விருத்தி செய்ய அமெரிக்கா எடுத்த நடவடிக்கைகளின் ஒரு அம்சமாகவே 6% இலிருந்த வட்டி 20%மாக உயர்த்தப்பட்டது. தமது Havley Davidson மோட்டார் சைக்கிள்களை காப்பாற்றுவதற்காக வெளிநாட்டு (குறிப்பாக ஜப்பானிய) மோட்டார் சைக்கிள்களுக்கான சுங்கத்தீர்வை 4.5% இலிருந்து 49.5% மாக உயர்த்தியது. தனது நாட்டிலேயே 10 மில்லியன் பேருக்கு வேலையின்மையும், இந்த வருடம் $100 மில்லியன் துண்டு விழும் தொகையும் கொண்ட நாடான அமெரிக்காவானது ஆயுத தளபாடங்களை மிரட்டி உருட்டி விற்பனை செய்வதன் மூலம் தனது பொருளாதாரத்தை தாக்குப் பிடித்துக் கொண்டு வருகின்றது. சோவியத் யூனியனுடன் எரிவாயு ஒப்பந்தத்தை செய்யக் கூடாது என மேற்கு ஐரோப்பிய நாடுகளை தடுக்கப் புறப்பட்ட அமெரிக்காவானது, தனது தானிய ஏற்றுமதியை இன்றுவரை தடைசெய்யவில்லை. தென்கொரிய விமானத்தை சுட்டுவிட்டதாக ஓலமிட்டுக்கொண்டு திரியும் அமெரிக்காவானது இன்றுவரை ருஷ்யாவிற்கு எதிராக பொருளாதாரத் தடைகளை மேற்கொள்ள முடியாதிருப்பது அமெரிக்க நிதிமூலதனத்தின் வலுவிழந்த தன்மையையே குறிக்கிறது.

மத்திய கிழக்கின் எண்ணெய் வளத்தையும், மூன்றாவது உலக நாடுகளின் மூலப்பொருட்களையும் தனது ஆக்கிரமிப்பின் கீழ்கொண்டு உலகின் அனைத்து செல்வங்கள் முழுவதும் பலவந்தமாக ஆட்சி செய்யும் இந்த அமைப்பின் "அடிமை" சாமிகள் எகிப்து, சூடான், லிபீரியா, தென்னாபிரிக்கா, பிரேசில், அர்ஜன்டீனா, மெக்ஸிக்கோ, சிலி, கொண்டுராஸ், இஸ்ரேல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கிஸ்தான், பங்களாதேஷ், சிங்கப்பூர், இந்தோனேசியா, இலங்கை போன்ற நாடுகளின் தலைவர்களாக கொண்டுவரப்பட்டார்கள்.

ஜயவர்த்தன போன்ற ஏகாதிபத்திய சேவகத் தலைவர்கள் ஆட்சிக்கு வரும் காலங்களில், செயற்கையாக பொருள்கள் கொடுக்கப்பட்டு நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் சிறிது காலத்திற்கு உயர்த்திப் பிடிக்கப்படும். இதன் காரணமாகவே U-N-P யின் முதலாவது ஆண்டு ஆட்சிக் காலத்திலே 5 ரூபா விற்ற சீனி 3 ரூபாவாக குறைக்கப்பட்டதும், வெங்காயம், உருளைக்கிழங்கு, அரிசி செத்தல் மிளகாய் போன்றவற்றின் விலைகள் தற்காலிகமாக குறைக்கப்பட்டதும் ஆகும். புதிதாக ஆட்சிக்கு வரும் U-N-P கட்சியானது அதன் விரோத சக்திகளால் தகர்க்கப்படாதிருப்பதற்காக அடக்கப்பட்ட மக்களின் ஆதரவை அரசின் பின்னால் திரட்டுவதற்காகவும் ஏகாதிபத்தியமானது இலங்கையின் U-N-P போன்ற அரசுகளுக்கு வழியமைப்பது தனது நலனுக்கே. புதிய அரசானது தனது ஆயுதப்படைகளின் தலைவர்களாக தமது நம்பிக்கையானவர்களை உருவாக்கி— நீதிபதிகள், அரச அதிபர்கள் உட்பட அரச இயந்திரங்கள் அனைத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும்வரையும் இச் செயற்கையான வாழ்க்கைத்தர நிலைமைகள் பராமரிக்கப்படும். அதன் பின்னர் ஆட்சியானது மக்களுக்காக அல்லாது உள்நாட்டு சர்வதேச முதலாளிகளுக்காக முன்னர் கொடுக்கப்பட்ட கடுமையான அடக்குமுறையுடன் சேர்ந்து தொழிலாளவர்க்கத்தின் இரத்தத்தை உறிஞ்சி நடாத்தும் ஆட்சியாக பரிணாமம் அடையும்.

1977-ஆம் ஆண்டில் U-N-P அரச ஆட்சிப் பொறுப்பேற்றபோது 5 பில்லியன் ரூபாய்கள் மட்டுமே அரச கடனாக இருந்தது. இன்று 42 பில்லியன் ரூபாய்களாக அதிகரித்து விட்டது. கடந்த ஆறு வருடங்களில் ஏகாதிபத்திய அரசு 37 பில்லியன் ரூபாய்களை இலங்கை அரசுக்கு கடனாகக் கொடுத்ததன் மூலம், தமது விருப்பப்படி மட்டுமே ஆட்சி செய்து வருகின்றனர். சுதந்திர வர்த்தக வலயத்தை உருவாக்கியதானது சர்வதேச முதலாளிகள் எமது நாட்டுத் தொழிலாளர்களை நேரடியாக சுரண்டுவதற்கு வாய்ப்பளித்தது. சுதந்திர வர்த்தக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலய சட்டங்களின் பிரகாரம் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைப்பதையோ, சம்பள உயர்வு, வேலைவசதி கோரி வேலை நிறுத்தம் செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலாக உலகின் வேறு எங்குமே காணாதவகையில் சுதந்திரவர்த்தக வலயத்தில் பெண்தொழிலாளர்கள் இரவுநேரவேலைக்கு (night shift duty) கட்டுப்பட்டேயாக வேண்டும் என சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

தமது ஆட்சிக்காலத்தில் மகாவலி அபிவிருத்தித் திட்டம், கிராமிய பாலம் பனைத்திட்டம், கிராமிய வீடமைப்புத்திட்டம் முதற்கொண்டு ஆயிரக்கணக்கான பகட்டுத்திட்டங்கள் தீட்டி மாதாமாதம் மக்களை நம்பப்பண்ணி அதுவும் பற்றாமல் பெரும்பான்மை சிங்கள மக்களின் நாளாந்த வாழ்வில் புலிக்கதை, சிங்கக்கதை சொல்லி அவர்களுக்கு இனவெறியை ஒருபுறத்தால் தூண்டி, மறுபுறத்தில் அமிர்தலிங்கத்தை விலைக்கு வாங்கி வீரபாண்டிய கட்டபொம்மன் கதைகளை ஆயிரக்கணக்கில் கட்டவிழ்த்துவிட்டு தமிழ் மக்களை இனவாதிகளாக்கி இவ்விரு இனங்களின் காலாகாலக் கிளர்ச்சிகளுக்கு நடுவே தொழிலாள வர்க்கத்தை ஒட்ட உறிஞ்சி அவர்களின் வர்க்க உணர்வை மழுங்கடித்து தமது உல்லாச உப்பரிகை வாழ்வை அணுஅணுவாய் ரசித்து அனுபவித்து வரும் இந்த ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது அடிவருடிகளும் இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தின் பிற்போக்கான இன்றைய நிலையில் குளிர்காய்கின்றார்கள். ஆனால் தொடர்ந்து எத்தனை நாட்கள்? இந்நிலைத்தனத்திற்கெதிராக வியட்நாமியர் கேணல் கடாபியின் அணிவகுப்பு நடவடிக்கையை ஒழிக்க யோசித்துக் கொண்டிருக்கையில், இன்றைய செய்தித்தாளின் தலைப்பும் என்னைப் பெரிய அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஈரானில் எவ்வாறு மன்னர் ஷாவிற்கெதிராக கிளம்பிய புரட்சிப் புயல் அங்கு அமெரிக்க ஏகாதிபத்திய சுரண்டலையும், அமெரிக்க அணுவாயுத தளத்தையும் ஈரானிலிட்டு புரட்டியெறிந்ததோ அந்த பாணியில் இன்று பிலிப்பைன்ஸ் மக்கள். நான் இக்கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிட்டிருந்தது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கியூனோவின் கொடியானது ஜனாதிபதி மார்க்கோஸ்க்கு எதிராக மக்களின் வெற்றிக்கு ஒன்றாய் வார்த்திருக்கிறது. அக்கியூனோவின் கொலையானது 17 வருடகால மார்க்கோஸின் ஆட்சியின் மேல் ஒடுக்கப்பட்ட மக்களின் வெறுப்பை மேலும் கூட்டியுள்ளது. மார்க்கோஸின் வாசஸ்தலமான Malacanang அருகில் மாணவர்களின் ஆர்ப்பாட்டம் ஈற்றில் ஆயுதப்படைகளுடனான முட்டி மோதலில் முடிந்துள்ளது. தொலைக்காட்சிப் பத்திரிகைகள் 7 பேர் (மக்கள் தரப்பில்) கொல்லப்பட்டதாகவும், நூற்றுக்கணக்கில் காயம்பட்டதாகவும் தெரிவிக்கின்றன. 500,000 மக்கள் கூடிய கூட்டத்திலே மறைந்த எதிர்கட்சித் தலைவர் அக்கியூனோவின் மனைவி Corazon உரையாற்றுகையில் "எந்த இழப்பு வரினும் நான் சுதந்திரத்தைப் பாதுகாப்பேன்" எனக் குறிப்பிட்டார். மார்க்கோஸிற்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் மிகமிகப் பெரியதாகவும், தாக்கம் மிக்கதாகவும் அமைந்துள்ள இக்கூட்டமானது ஈற்றில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராக திரும்பியுள்ளது. "மார்க்கோஸ்-அமெரிக்க சதி ஒழிக", "மார்க்கோஸ் சர்வாதிகாரம் ஒழிக", "அமெரிக்காவுடனான கடற்படை, ஆகாயப்படை தளத்திற்கான ஒப்பந்தத்தை ரத்துச் செய்", "றேகன் கிட்லர் நரகத்திற்கு போ", "பிலிப்பைன்ஸிற்கு வராதே" போன்ற சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் ஆர்ப்பாட்டக்காரர்கள் சென்றனர். இதன் பத்தியிலேயே பிலிப்பைன்ஸின் பொருளாதாரத்தை உயர்த்த 10 அம்சத்திட்டத்தினை அறிவிக்க மார்க்கோஸ் தொலைக்காட்சியின் முன் தோன்றியுள்ளார். இது எமக்கு ஜயவர்த்தன-அரசாங்கத்தின் "மாவட்ட அபிவிருத்தி சபை நாடகத்தை நினைவுபடுத்தவில்லையா?

இதே நேரத்தில் குறிப்பிட வேண்டிய மற்றுமொரு விடயம் 400 வேட்பாளர்களை குறிக்கும் தேர்தலில் போட்டியிட முடியாது தடுக்கப்பட்டதாக முன்னர் எழுதியிருந்தேன். இன்று அது 642 பேராக கூடியுள்ளது. இக் கட்டுரையை எழுதி முடிக்கமுன்னர் உலக [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார மாற்றங்கள் இவ்வாறாக அமைகின்றதெனில் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களிற்கு மக்களை அணிவகுக்க தேவையான முறைகளை அரசியல் வாதிகளின் பங்கினை நாம் குறைத்து மதிப்பிட முடியுமா?

கடந்த புரட்டாசி முதலாம் திகதி லிபியப் புரட்சியானது தனது 14 வருட நிறைவினைப் பெற்றுள்ளது. இதிரிஸ் மன்னரின் (King Idris) கொடுங்கோலாட்சியை முடிவுக்கு கொண்டு வந்து, தமது வாழ்வினை வளம்படுத்த முனைந்த லிபிய மக்களின் திருநாள் 1969 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 1ம் திகதியாகும். ஆயிரக்கணக்கான புதிய வீடுகளும், ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள், அனைத்து குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி, நூலகங்கள், புதியவீதிகள், விவசாயிகளுக்கான நீர்ப்பாசனவசதி, தொலைபேசி; மின்சாரவசதி உட்பட அனைத்து வசதிகளையும் தமது 14 வருடத்திலான புரட்சிக்காலக் கட்டத்தில் மக்கள் பெற்றுக்கொண்டனர். லிபியமக்கள் இவ்வாறாக தமது பெறுபேறுகளை எண்ணிப் பெருமிதமடையும் இவ்வேளையிலேயே சர்வதேச சதிகாரர்கள் லிபியப் புரட்சியை தோற்கடிக்க தமது சக்தியை பாவித்துக் கொண்டிருக்கின்றனர்.

International Herald Tribune எனும் முதலாளித்துவ ஆங்கிலப் பத்திரிகையில் ஆகஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதி அதீத வலதுசாரி எழுத்தாளரான William Pfaff என்பவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார். 'வெள்ளை மாளிகை, பென்டகன் வட்டாரங்களில் லிபியாவின் கேணல் கடாபியை மாற்றுவதற்கான மிகநல்ல தருணமாக இந்தத் தருணம் கணிக்கப்படுகின்றது. William Pfaff மேலும் குறிப்பிடுகையில் 'அமெரிக்காவினது ஆயுத சக்தியானது, லிபியாவின்மீதும் பலமடங்கு கூடியது என்பதில் சந்தேகம் ஏற்படுவதற்கில்லை. ஆயினும் 'அமெரிக்காவானது லிபிய அரசாங்கத்தை உடனடியாக தூக்கியெறியும் போது அது உலக அரசியலில் ஆக்கிரமிப்பாக கருதப்படும் போது பல அரசியல் பின்விளைவுகள் ஏற்படலாம் என்பதே இன்றுள்ள தடையாகும்! எனக் குறிப்பிட்டுள்ளார்.

லிபிய மக்களாட்சியானது 3 மில்லியன் மக்களை உள்ளடக்கியது. இதே நேரத்தில் அமெரிக்காவானது 220 மில்லியன் மக்களைக்கொண்டுள்ள வல்லரசாகும். இந்நிலையிலே லிபியாவானது அமெரிக்காவுடன் வியா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார நீதியில் கோட்பாடுபோடாத ஒருநாடாகும். இந்த போதிலும் ஈரானிய மக்களின் ஒற்றுமைக்காகவும், உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், உலக விடுதலை இயக்கங்களுக்கு சார்பாகவும் குரல் எழுப்புவதன் காரணமாகவே துரோகனாகவும், கொலைகாரனாகவும், கிரிமினலாகவும், வெறியனாகவும் உலகின் மிகப் பயங்கரமான மனிதனாக கேணல் கடாபி வர்ணிக்கப்படுகின்றார். இந்த ஏகாதிபத்தியப் பிரதிநிதிகள் என்றுமே இந்த 'பயங்கரவாதியுடன்' பட்டத்தினை அர்ஜிரப்போரில் மறைந்த தலைவர் பிரஸ்னேவிற்குகூட சூட்டவில்லை. இன்று ஏகாதிபத்தியப் போரின் யுத்தக்களமாக விளங்கும் சாட் (Chad)டில் செயற்படும் கிளர்ச்சிகளானது சாதனையை அண்டைநாடான லிபியாவினையே குறியாகக் கொண்டு செயல்படுகின்றன. இதற்கு மத்தியிலே திரிபோலியிலுள்ள பச்சைச் சதுக்கத்தில் லிபியப் புரட்சியின் 14வது ஆண்டு விழாவில் பேசிய லிபியத் தலைவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராக குரல் எழுப்பினார். அமெரிக்காவின் ஆறாவது கடற்படையானது 'சிட்ரா' வளைகுடாவினுள் (லிபிய கடல் எல்லையினுள்) நுழையுமாயின் அதனை எதிர்கொள்ள லிபியாவின் ஆகாய, கடற் படைகள் தயாராக உள்ளதாக அறிவித்தார். "அமெரிக்க ஏகாதிபத்தியமானது எம்மை அடிமைகளாக இருந்து தமக்கு பணிபுரிய வேண்டுமென விரும்புகிறது. எமது மூதாதையர் சுதந்திரத்துக்காகவும், கௌரவத்திற்காகவும் நடாத்திய போராட்டங்களின் அனுபவங்களை மறந்து எம்மை அடிமைகளாக்க முனைகிறது. உலகின் எந்தச் சக்தியும் எமை பயங்கரப்படுத்த முடியாது. எமது நாட்டில் உரிமையுடன் வாழ்வதற்கு எமக்கு உரிமையுண்டு. சுதந்திரம் பறிக்கப்படுமானால் அதை எதிர்த்து இறப்பதற்கும் அஞ்சமாட்டோம் எனக் குறிப்பிட்ட லிபியத் தலைவர், இத்தாலியை விடுவிப்பதற்காக கரிபால்டி (Garibaldi) நடாத்திய போராட்டமும் அன்றைய பிரித்தானிய காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற ஜோர்ஜ்வாஷிங்டன் நடாத்திய போராட்டமும் சுதந்திரப் போர்களாக ஏற்றுக்கொள்ளப்படும் போது லிபியப்புரட்சி மட்டும் அதுவும் அரபிய மக்களின் புரட்சிக்கும் ஆதரவு தரும் காரணத்தினால் பயங்கரவாதமாக வர்ணிக்கப்படுவதை அவர் சாடினார். ஏகிப்தும், சூடானும் தமது சுதந்திரத்தை விலை கூறி அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு விற்றது போல எம்மையும் எமது சுதந்திரத்தை விற்குமாறு அமெரிக்க ஏகாதிபத்தியம் நச்சிப்பிடிப்பது தான் வைத்தியக்காரத்தனமானது எனக் குறிப்பிட்ட கடாபி, நாங்கள் சுதந்திர-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதை கொண்டாடும் இதே வேளையில் எகிப்தின் மீது அடிமை விலங்-கவ்வித் கிடப்பதை நினைவு கூர்ந்தார். எகிப்திய ஜனாதிபதி Hosni Mubarak இன் போக்கினைச் சாடிய அவர் அராபிய மக்களின் உரிமை-களை குழிதோண்டிப் புதைக்கும் அராபிய மக்களின் உரிமைகளை குழிதோண்டிப் புதைக்கும் "காம்ப்டேவிட்" தீர்மானத்தை உதறித்தள்-ளுமாறு வேண்டுகோள் விடுத்தார். அராபிய உலகம் பூராவும் விடுதலை அடையுமுன்னர், எமது விடுதலையானது நிறைவு பெறாது என்றேன அவர் குறிப்பிட்டார்.

ஈராக்கினது போர்வெறியை கண்டித்த கடாபி இன்று ஷாஹி-னது ஈரானுக்கு எதிராக ஈராக் போர் தொடுத்திருந்தால் தான் ஈரா-கின் கரையிலேயே நின்றிருந்திருப்பதாகவும் கூறினர். ஷாஹிற்கு எதிராக போர் தொடுக்க நாம் சதாம் ஹூசெய்னை கேட்க மறுத்த அவர் 1975-ஆம் ஆண்டில் அல்ஜீரியாவில் வைத்து ஒப்பந்தமும் கை-யெழுத்திட்ட சம்பவத்தை நினைவுக்கு கொண்டு வந்த கடாபி இன்று சதாம் ஹூசெய்ன் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏஜன்டாக செயல்படுவதாக குறிப்பிட்டார்.

இவ்வாறாக ஏகாதிபத்திய விசைகளும் அதன் எதிர் விசைகளும் ஒன்றையொன்று தாக்குவதன் அம்சமாக பூகோளம் எங்கணும் போ-ர்ப்பறை செவிப்பறையை பதம் பார்க்கிறது. இந்நிலையிலே தமிழ் ஈழப் போராட்டமானது தனிப்பட்ட பெயர்ப்பலகை மாற்றுவத-ற்கான போராட்டமாகவல்லாது இன்று ஏகாதிபத்திய எதிர்ப்-போராட்டமாக சர்வதேச தன்மையைப் பெற்றதன் காரணமா-கவே தமிழ் மக்களுக்கு மாக்சீய-லெனினிசம் மீதும் தொழிலாள வர்க்கத்தின் மீதும் திடீரென்று ஓர் காதல் பிறந்தது. ஆயினும் இவர்களால் உலகளாவிய பொருளாதார நெருக்கடியானது அதன் உற்பத்தி முறையானது ஏற்படுத்திய முரண்பாட்டால் அதாவது உற்பத்தி சாதனங்கள் தனியார் சிலருக்கு சொந்தமாகவுள்ள முரண்பாட்டிலிருந்து பரிணமம் அடைந்ததென்பதை விளங்கிக் கொ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன்றை முடியவில்லையென்றே எண்ணத்தோன்றுகின்றது. ஏனெனில் ஆதி மனித சமுதாயத்திலிருந்து முதலாளித்துவம் பரிணமம் அடைந்ததையும் முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக எல்லைகடந்து வளர்ந்ததையும் புரிந்து கொண்டால் முதலாளித்துவம் சர்வதேச ரீதியில் அணிவகுத்தி-ருப்பதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியாது. சர்வதேச ரீதியில் அணி-வகுத்த முதலாளித்துவத்தின் ஒரு பாகமான U-N-P அரசினைத் தோற்-கடிப்பதானது சர்வதேச ரீதியில் அணிவகுக்கப்பட்ட தொழிலாள வர்க்கக் கட்சியின் கிளையான தமிழ்தொழிலாள வர்க்கக் கட்சியினால் மாத்தி-ரமே முடியும் என்ற நிலைப்பாட்டிற்கு இந்த இயக்கங்கள் இன்றும் வரவாயில்லை.

முதலாளித்துவத்தின் அஸ்தமன நெருக்குவாரத்தை விளங்கிக் கொண்ட நாங்கள் தமிழ் ஈழம் பெறுவதற்காக அப்பேற்பட்ட ஒரு கட்சியைப் படைப்போமா?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V.MAHADEVA

**Thamil Eelam International Liaison Committee**
**P.O.Box 2004, 7030 Böblingen**
**West Germany**

☎ 0711 / 64 98 51 8


தோழர்களே,
தமிழ் ஈழ விடுதலைக்கான
பிரயத்தனம் தாங்கி வெளி
வரும் எண்ணம் பத்திரி
கையை வளர்த்து எண்ணி
க்கையை அதிகரிக்க
உங்களாலான உதவி புரியு
மாறு தாழ்மையுடன்
வேண்டிக் கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிக் கவி பாரதி

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ?—புலனில்
வாழ்க்கை இனியுண்டோ?—நம்மி லந்த
வாழ்க்கை இனியுண்டோ?
இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு;
கனியும் கிழங்கும் தானி யங்களும்
கணக்கின்றித்தரு நாடு—இது
கணக்கின்றித்தரு நாடு—நித்தம் நித்தம்
கணக்கின்றித்தரு நாடு—வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org